102

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்

4 - JAN 1941
MADRAS



## அடுத்த இதழில் புதிய மலர்

## புகழ்மாலை

* ரமா பரிசுத்தமான இதயத்தையுடைய தருணீமணி.
* தன் தாயின் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற டாக்டர் தொழிலை மேற்கொண்டு அதில் மிக்க சந்தோஷத்துடனும் ஆசையுடனும் ஈடுபடுகிறள்.
* பிறர்துயராற்றுதலையே தன் சொந்தப் பணியாகக் கொண்டு உள்ளும் புறமும் ஒத்துழைக்கிறள். ஏழைகளுக்கு இனமாக உழைத்து இன்புறுவதே அவளுக்குப் பேரின்ப நிலையாய்த் தோன்றியது.
* அவள் விரும்புவதெல்லாம் தன் தொழிலில் வெற்றியைத்தான்.

அது வளர் பிறை போல் வளர்ந்து புகழ் மாலையை தினே தினே அவளுக்குச் சூட்டுகிறது; ஆனல் கடுகளவும் கர்வங்கொள்ளவில்லை.

* அவளுடைய புகழ் சிகரத்தை எட்டியது. ஆனல் பொறமைப் பேய் அவளைப் படுகுழியில் தள்ளியது.
* புகழின் வளர்ச்சி பொறமை ஜ்வாலையாக தேவராஜனுக்குமாறும் விநோதத்தால் எத்தனை தடுமாற்றம்! எத்தனை சோதனை! எத்தனை விசித்திரம்! வாழ்க்கையில் எத்தனை பூகம்பங்கள்!
* பொறமைக்கு வெற்றியா? பொறமைக்கு வெற்றியா? **தொடர்ந்து படியுங்கள்.**

டிசம் 1940
சந்தோஷ மலர் [முடிவு]
அணு 2
ஜனவரி 1941-ல் 18-வது ஆண்டு ஆரம்பம்.

# ஜகன்மோகினி

| | வருஷ சந்தா | தனிப்பிரதி | ஜீவியசந்தா |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 1-8 | 2 அணா | ரூ. 25. |
| வெளிநாடு | ரூ. 2-0 (3 ஷிலிங்) | 12 காசு | ரூ. 30. |

ஜீவிய சந்தாதாரருக்கு சஞ்சிகையை அனுப்புவதுடன், இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும். முன்பணமனுப்பவும். வி. பி. கிடையாது.

குறைந்த விலை

## அரிய சந்தர்ப்பம்

கொஞ்சம் பிரதிகள்தான்

அடியிற்கண்ட நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டிய அன்பர்கள் உடனே முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| | | சஞ்சிகை விலை | தனிநாவல் விலை |
|---|---|---|---|
| ஜீவியச்சுழல் | ரூ. | 0 10 | 1 4 |
| கானல் நீர் | | 0 10 | 1 4 |
| சந்திரமண்டலம் | | 0 8 | 1 0 |

| | | சஞ்சிகை விலை | தனிநாவல் விலை |
|---|---|---|---|
| ஆனந்தஸாகர் | ரூ. | 0 4 | 0 8 |
| மாலதி | | 0 4 | 0 8 |
| படகோட்டி | | 0 4 | 0 8 |

கீழ்க்கண்ட நாவல்களில், சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் (Shop-soiled) அவற்றைப் பாதி விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தபாற் செலவு வேறு. 5 நாவல்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ. 5 அனுப்பினால் தபாற் செலவு இனாம்.

கொஞ்சம் காபிகளே இருப்பதால் உடனே வாங்கிக்கொள்ளவும்.

| | | பாதி விலை | | தபாற்செலவு உள்நாடு | தபாற்செலவு வெளிநாடு |
|---|---|---|---|---|---|
| வைதேகி | ரூ. | 1 4 | அணா | 4½ | 6¾ |
| பத்மசந்திரன் | | 1 4 | | 4 | 6 |
| சாமளநாதன் | | 1 0 | | 3 | 4½ |
| சாரமதி | | 0 14 | | 2¾ | 3¾ |
| பரிமளகேசவன் | | 0 10 | | 2 | 3 |

பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

## ஆத்மசக்தி

முதல் பதிப்பு—ஜனவரி 1940.
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் 1940.

**11 ஆப்டோன் படங்கள்**

பலவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.
தபாற் செலவு உள்பட
உள் நாடு — ரூ. 1-4
வெளி நாடு— 2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் பல வருடங்களாக
எதிர்பார்த்த புதிய பதிப்பு

## மாதவமணி

**முற்றிலும் புதிதாக மாற்றி**

பெரிதாக எழுதப்பட்டுள்ளது
(முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணா)
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணா
தபாற்செலவு உள்பட
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளிநாடு-2 போஸ்டல் கூபன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.




மதுரை ஜில்லாவுக்கு ஸப்-டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்:
ஸ்ரீராமா பிக்சர்ஸ், போடிநாயக்கனூர்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 17 | விக்ரம ௵ கார்த்திகை ௴<br>டிசம்பர் 1940 | இதழ் 12 |
|---|---|---|

இராகம் : காலிகா. தாளம் - த்ரிபுட.

பல்லவி

வச்சி நாதோ பல்குமிரா
வனஜ நயனு ராமா! (வ)

அநுபல்லவி

முச்சடைன மோமுனுஜூட
இச்சட காசுகொன்னுனுரா (வ)

சரணம்

பங்கஜாக்ஷி லோலுட
அங்கஜ ஸ்வரூபுட
சங்கசக்ர தாருட
மங்கள கோதா லோலுட. (வ)

கருத்து.

ஹே தாமரைக் கண்களையுடைய பரந்தாமா! என்னிடம் வந்து ஒரு வார்த்தை சொல்லுடா! ராமா! எழில் மிகுந்த உனது திருமுகமண்டலத்தின் சேவையைக் கண்டுகளிக்க இவ்விடம் நான் நொண்டிப் பறவைப்போல் காத்திருக்கிறேனப்பா! பங்கஜமலரைப்பழிக்கும் நேத்திரத்தை உடைய லக்ஷ்மியின் மணாளா! மன்மதனைப்பெற்று அவனுக்குமேல் அழகுடன் விளங்கும் திவ்யஸ்வரூபா! துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் சங்குசக்கர பாணியாய் காக்ஷிக்கொடுக்கும் ஏ ராமா! ஸர்வமங்களத்தையும் கொடுத்து பக்தர்களை ரக்ஷிக்கும் கோதாநாயகா! வந்து என்னுடன் பேசடாப்பா!

---

திருத்தம் : நவம்பர் இதழில் 177-வது பக்கம் 20-வது வரியில் உறையூரில் என்றிருப்பதை ஸ்ரீரங்கத்தில் என்று படிக்கவும்.

---

## முக்கியமாகக் கவனிக்கவும்.

1. டிசம்பர் 26-ந் தேதிக்குள் சந்தா அனுப்புவோர் பரிசுப்போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
2. டிசம்பர் கடைசி வரை புது நாவலுக்குக் குறைந்த விலை.
3. 5 வருஷங்கள் சந்தாதாராயிருப்போருக்கு இனாம் நாவல்கள்.
4. 3 சந்தா சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

தமிழ்நாடு ... 183048

# க்ஷேமலாபங்கள்

4-JAN
MADRAS

## மோகினியின் அன்பர்களே !

தயாபரனின் திருவருளாலும், உங்களுடைய அபாரமான பேருதவியாலும் இந்த டிஸம்பர் மாதத்துடன், "மோகினி"ச்செல்விக்கு 17 ஆண்டுகள் பூர்த்தியாகி, 1941-வது வருஷம் ஜனவரி மாதம் 18-வது ஆண்டு பிறக்கப்போகின்ற சந்தோஷத்தை உங்களுடன் நானும் பகிர்ந்துகொள்கிறேன்.

சென்ற இதழில் நான் அறிவித்தபடியே புதிய புத்தகம் "கருணாலயம்" என்கிற பெயருடன் அழகிய படங்களுடன் தயாராகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். யுத்த நெருக்கடியினால் ஒவ்வொன்றும் விலை அதிகமாகிவருவது நேயர்களறியாததல்ல. இருப்பினும் நமது சந்தாநேயர்களுக்குத் தனிச் சலுகைக் காட்டும்பொருட்டு **53**-வது நாவலாகிய, "கருணாலயத்"தை நாம் முன்பு தெரிவித்தபடியே டிஸம்பர்மாதம் முடிவுவரைக்குந்தான் 8 அணா விலையில் கொடுக்கப்படும். அதற்குப்பிறகு புத்தகத்தில் கண்டுள்ள விலைக்குத்தான் என்பதை வணக்கத்துடன் ஞாபகப்படுத்துகிறேன். ஏனைய புத்தகங்களை ஆதரித்ததுபோல் இந்த புதிய புத்தகத்திற்கும் உங்கள்பேராதரவைக்காட்டி உதவிபுரியக்கோருகிறேன்.

சில நண்பர்கள், **41**-வது வருஷத்துச் சந்தாவுடன் புதிய புத்தகத்திற்கும் சேர்த்தனுப்பியிருப்பதற்காக நான் எனது மனமார்ந்த நன்றியுடன்கூடிய வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு மற்றவரும் சந்தாவுடன் புதிய புத்தகத்திற்கும் சேர்த்தனுப்பவேண்டுகிறேன்.

அநேக சகோதர சகோதரிகள் புதிய வருடத்திற்கு வாழ்த்துச் செய்திகளும் ஆசியும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எனது மனமுவந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். மோகினி புதிய வருடத்தில் "புகழ்மாலை" என்கிற பெயருடைய நாவலைத் தாங்கி, ஜனவரி முதல் தேதியன்று உங்களை தரிசிக்க வருவாள். உங்களுடைய ஆசியையும் ஆதரவையும் அளிக்க வேண்டுமாய் மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதிய வருஷத்தில் சில நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்க சிற்சில புதிய அம்சங்களைச் சேர்த்து வெளியிடுகிறேன்.

### ஞாபகமிருக்கட்டும்.

கடிதங்கள் எழுதும்போதும், மணியார்டர் செக் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பும்போதும் ஆசிரியைக்கோ, பிரசுரகர்த்தாவுக்கோ தனிப்பட்ட பெயரில் இல்லாது, நமது காரியாலயத்தின் பெயருக்கே ("ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.) எழுதினால் பலவிதத்திலும் சௌகரியமாகயிருக்கும்.

நன்றியுள்ள,

**வை. மு. கோதைநாயகி.**

## PLEASE NOTE

To address your letters and remittances *to the office* (Jaganmohini Office, 26, Car Street, Triplicane.) *direct* and not to the Editor or Publisher individually.




[வை. மு. ஸ்ரீநிவாஸன். M.A., B.L., அட்வோகேட்.]

நித்தியானந்தர்:—என்ன சர்மாஜீ! இந்த ரேடியோ செட் எந்தெந்த விதமாகவெல்லாம் உபயோகப்படுகிறது பார்த்தீரா? நாளுக்கு நாள் என்ன முன்னேற்றம்! என்ன அருமையான அனுபவம்!

லாவண்ய சர்மா:—இப்போது திடீரென்று என்ன அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டது?

நி:—நாம் நம் வீட்டினுள்ளிருந்துகொண்டே வெளியூரில் நடக்கும் உத்ஸவாதிகளைக் காதால்கேட்டு மனதால் ஆனந்திக்கிறோம்; பக்திப் பெருக்கால் பேரானந்தமடைகிறோம்.

லா,—இது மாத்திரமா! வீட்டிலிருந்தபடியே பல மைல்களுக்கப்பால் நடக்கும் கிரிக்கெட் பந்தயத்தைப்பற்றிய விமர்சனத்தைக்கேட்டு சந்தோஷப்படுகிறோமல்லமா?

### 1. சிக்கில் ஸ்கந்த சஷ்டி.

நி:—ஆமாம். சென்ற மாதத்தில் ஷை இரண்டு விதங்களிலும் பெரிய விருந்து நடந்தது. "சிக்கில் ஸ்கந்த சஷ்டி" உத்ஸவ சம்பந்தமாக சில நிகழ்ச்சிகளை காலையிலும் மாலையிலும் திருச்சி நிலையத்திலிருந்து ஒலிபரப்பினார்கள். அவற்றைக் கேட்கும்போது உண்மையாக அந்த உத்ஸவம் நடக்குமிடத்திலிருப்பதுபோன்ற உணர்ச்சியே ஏற்பட்டது. நேயர்களின் பக்திரஸத்தை த்ருப்தி செய்வதில் திருச்சி நிலையத்தார் ஏற்கெனவே பிரஸித்தியடைந்துள்ளனர். விசேஷ சமயங்களிலெல்லாம் தகுந்த சிரத்தை காட்டி நம்மை திருப்தி செய்திருக்கிறார்கள்.

லா:—ஊரைவிட்டு ஊர் எடுத்துச் செல்லக்கூடிய சிறிய ஒலிப்பரப்பு இயந்திரம் எவ்வளவு உபயோகமானதாக விருக்கிறது!

### 2. பூனா கிரிக்கெட் பந்தயம்.

நி:—அதற்கு இன்னொரு உதாரணம், பூனாவில் நடந்த கிரிக்கெட் பந்தயத்தைப்பற்றிய விமர்சனம் பம்பாய் நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டதுதான். ஸ்ரீ தலையார்கான் இதுவரை அவ்வளவு உத்ஸாசத்துடனும் இயற்கையுடனும் வர்ணனை செய்ததேயில்லையென்று சுலபமாகச் சொல்லிவிடலாம். கண்ணை மூடிக்கொண்டே நாம் கிரிக்கெட் பந்தயத்தை நமது வீட்டிற்குள்ளேயே பார்க்கும் சந்தோஷத்தை அவரது ரஸமான வர்ணனை அளித்தது. ரஞ்சிட் ட்ரோபி பந்தயத்தில் முதல் இன்னிங்க்ஸ் 5 நாட்கள் நடந்தது இதுவே முதல் தரமாம். மொத்தம் 1325 ரன்கள் எடுத்ததை நம்

காதால் கேட்டது மாத்திரமல்லாமல் நேரிலேயே பார்த்ததுபோன்ற உணர்ச்சி எழுந்ததற்கு ஸ்ரீ தலேயார்கானின் சாமர்த்தியந்தான் காரணம்.

லா:—சென்ற வருஷம் பென்டாங்குலர் பந்தயத்தின்போதுகூட அவர் வெகு நன்றாக விமர்சனம் செய்யவில்லேயா? தன் அபிப்பிராயங்கள் பலவற்றை வெளிப்படையாகச் சொல்லவில்லேயா?

நி:—ஆமாம். இம்முறையும் தனது அபிப்பிராயங்களே சரமாரியாகப் பொழிந்தார். கிரிக்கெட் விளேயாட்டிற்கும், ஜாதிமத பேதங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது; கூடாது என்றும், ஹிந்துவானுல் என்ன, முஸ்லிமானுல் என்ன, பார்ஸீயானுல் என்ன, ஸீக்கியரானுல் என்ன ? யாராயிருந்தாலென்ன ! எல்லோரும் இந்தியர்தானே. ஆகையால் கிரிக்கெட் தேசீய விளேயாட்டாகவும், மத வித்தியாசமின்றி ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்குமாகவும், ஒரு கோஷ்டிக்கும் மற்றொரு கோஷ்டிக்குமாகவும் நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினுர்.

## 3. மத சம்மந்தமான ஒலிபரப்பு.

லா:—வாஸ்தவந்தானே! மதத்திற்கும் விளேயாட்டிற்கும் என்ன சம்பந்தம்? மதசம்பந்தமான கொள்கைகளும், பக்தியும் அவரவாது தனிப்பட்ட மனப்பான்மையை யொட்டியிருக்கிறது. பிறமதத்தினருடன் நன்கு கலந்து பழகிக்கொண்டே, அதே சமயத்தில், தன்னேப் பொருத்தவரை தன் மதாசாரங்களே அனுஷ்டிக்கலாமல்லவா ?

நி:—ஆமாம். எல்லா மதத்தினரையும் திருப்தி செய்ய ரேடியோ அதிகாரிகளும் முன்வந்துள்ளார்கள். இதுவரை வட இந்திய நிலேயங்களிலிருந்து மாத்திரம் பகவத்கீதை, ராமாயணம், குரான்வாசகம், கிறிஸ்துவ தேவாராதனே முதலியவை ஹிந்தியிலும், வங்காளியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பப்பட்டு வந்தன. இப்போது தமிழிலும் ஷை நிகழ்ச்சிகளே ஒலிபரப்ப ரேடியோ அதிகாரிகள் முற்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேம். திருச்சியிலிருந்து பகவத்கீதை. தேவாரம், குரான், தேவாராதனே முதலிய நிகழ்ச்சிகள் பிரதி வாரமும் ஒலிபரப்பப்படுகின்றன. மற்றொரு விசேஷ அபிவிருத்தி பஜனே ஒலிபரப்புதான். சென்ற 16௳ காலே ஒலிபரப்பில் நடந்த பஜனே (தி) இன்னும் காதிலேயே ஒலித்துக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி சம்பிரதாய பஜனே ஒவ்வொரு வாரமும் நடத்தவேண்டும் என்று நான் வெகு நாட்களாகச் சொல்லிவரவில்லேயா?

லா:—நீர் பல முறையும் ஷை அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறீர். ஆனுல் நல்லகாலம் இப்போதுதான் ஏற்பட்டதுபோலும் !

நி:—நானும் அப்படித்தான் நினேக்கிறேன். நமது பக்தியால் ஏற்படும் தேவையைக் கூடியமட்டும் திருப்தி செய்ய ரேடியோ நிலேயங்கள் முன்வருவதை நாம் பாராட்டவேண்டியதுதான். இனி அங்கங்கே நடக்கும் திருவிழா முதலிய நிகழ்ச்சிகளே ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்திருக்கிறுர்கள். திருவண்ணுமலே தீபத்தைப்பற்றிய வர்ணனே ஒலிபரப்பப்போகிறுர்கள்.

## 4. ஒரு அரிய சந்தர்ப்பம்.

லா:—மார்கழி மாதம் தினந்தோறும் காலேயில் திருப்பாவை பாசுரம் பாடி அர்த்தம் வியாக்கியானம் செய்யப்போகிறுர்களா ?

நி:—கட்டாயம் செய்யவேண்டியதுதான். மாதங்களுக்குள் மார்கழி மாதமாகத் தான் தோன்றுவதாக பகவான் கீதையில் சாதித்துள்ளார். அப்பேர்ப்பட்ட புனிதமாதத்தில் பிரதிதினமும் ஸ்ரீ ஆண்டாள் ஒரு பாசுரம்

பாடி பாமாலை சமர்ப்பித்திருக்கும் வைபவத்தை தினசரி காலை ஒலிபரப்பினால் அதற்குத் தனி மகிமை உண்டு. இந்த அரிய சந்தர்ப்பத்தை திருச்சி நிலையத்தார் கைவிடமாட்டார்களென எதிர்பார்க்கிறேன்.

## 5. இசைத்தட்டு சங்கீதம்.

லா:—இசைத்தட்டு உபத்திரவம் எப்படி இருக்கிறது இப்போது?

நி:—அதில் மாறுதலே யில்லை. சங்கீதம் என்ற பெயருடன் பல சப்தங்களைத் தாங்கி சில தட்டுகள் வெளியாகியிருக்கின்றன. அவைகளை ஒலிபரப்பி தலைவேதனை செய்கிறார்கள். இசைத்தட்டு விஷயத்தில் ரஸிக்கக் கூடிய ஒரே ஒரு விஷயம் யாதெனில் திருச்சியில் சில நாட்களில் 'கச்சேரி' என்ற தலைப்பின் கீழ் வர்ணம் முதல் ஸ்லோகம் வரை பொறுக்கியெடுத்த சில இசைத்தட்டுகளை ஒலிபரப்புகிறார்கள்.

## 6. கோஷ்டி வாத்ய சங்கீதம்.

லா:—கோஷ்டிவாத்திய சங்கீதம் முன்போல நன்றாக விருக்கின்றதா?

நி:—இது விஷயமாக இருநிலையங்களுக்கும் இருந்த போட்டி இப்போது நின்றுவிட்டது என்று முன்பொரு சமயம் தெரிவிக்கவில்லையா? கோஷ்டிவாத்திய சங்கீதம் இரு நிலையங்களிலும் நன்றாயிருக்கின்றதெனினும், திருச்சியில்தான் அதிகரித்த சிரத்தைக் காட்டுவதாகத்தோன்றுகிறது. பிரபல கீர்த்தனாசாரியர்களின் சாஹித்தியங்களை நன்கு இசைப்படுத்தி ஒலிபரப்புவது அழகாயிருக்கிறது. "காட்சி கீதம்", "கதம்பம்", "சதுர்வாத்திய கானம்", "தாளவாத்தியக் கச்சேரி" என்ற தலைப்புகளின் கீழ் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் மிகவும் ரஸிக்கத்தக்கனவாகவுள்ளன. கொன்னக்கோலும் ஒரு பக்ஷத்திற்கு ஒரு முறை ஒலிபரப்பினால் நன்றாக இருக்கும்.

## 7. ஆரம்பகீதம்.

லா:—திருச்சியில் காலையில ஒலிபரப்பு முன்போல இப்போது கோஷ்டிவாத்தியத்துடன் ஆரம்பமாகிறதா?

நி:—இல்லை. சில சமயம் ஏற்கெனவே ஒலிபரப்பப்பட்ட கோஷ்டி வாத்தியத்திலிருந்து ஒலிப்பதிவு செய்யப்பட்ட சில பகுதிகளை ஒலிபரப்புகிறார்கள். சிலநாள் இசைத்தட்டு சங்கீதம்தான்.

லா:—ஒருதரம் ஒலிபரப்பப்பட்ட கச்சேரியிலிருந்து ஒலிப்பதிவு செய்த பகுதிகளை ஒலிபரப்புவதே மேலல்லவா?

நி:—கோஷ்டியார் நேரில் வாசிக்காவிடில் ஷை ஒலிப்பதிவே தேவலை ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே!

லா:—எதைப்பற்றி!

## 8. ஸம்ஸ்க்ருத நாடகம்.

நி:—ஸம்ஸ்கிருதத்தில் இரண்டு நாடகங்கள் திருச்சியிலிருந்து ஒலிபரப்பப்பட்டன. ஷை நாடகங்களை ஸம்ஸ்கிருதத்தில் ஒலிபரப்பப்போவதாக முன்னரே அறிவித்திருந்தால் ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்கள் மிக சிரத்தையுடன் கேட்டு ஆனந்தித்திருப்பார்கள். அம்மாதிரி அறிவிக்காததால், பல ரஸிகர்கள் நல்ல சந்தர்ப்பத்தை இழக்கநேரிட்டது.

லா:—இனி அம்மாதிரி நேராதென்று நினைக்கிறேன்...மாதர்கள் நிகழ்ச்சி எப்படி?

## 9. மாதர் நிகழ்ச்சிகள்.

நி:—அதை ஏன் கேட்கிறீர்? அந்த நிகழ்ச்சியில் மாதர்களுக்குக்கூட சிரத்தை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் ஸ்வாரஸ்யமாக்கவேண்டும்;

இல்லாவிடில் சென்னையில் டை நிகழ்ச்சியின் நேரத்தை கால்மணியாகக் குறைத்திருப்பதை திருச்சி நிலயமும் பின்பற்றினல் தேவலே.

## 10. சென்ற மாதத்திய கச்சேரிகள்.

லா:—சென்ற மாதம் விசேஷமாக அமைந்த நிகழ்ச்சிகள் எவை?

நி:—கச்சேரிகளை முதலில் எடுத்துக்கொண்டால் டி. ஆர். கிருஷ்ண மாச்சாரி வீணை (தி-5வ) திருவாவடுதுரை ராஜரத்னம்பிள்ளையின் வாய்ப் பாட்டு (தி-7வ); செம்பை வைத்தியநாத பாகவதர், (ம-9வ); பி. எஸ். ராஜா அய்யங்கார் (தி-11வ); முசிரி (ம-12வ) முதலியவர்களின் பாட்டும்; கே. எஸ். நாராயணய்யங்கார் கோட்டுவாத்தியம் (தி-14வ); பாலக்காடு ராமா பாகவதர் பாட்டு, டி. கே. ஜயராமய்யர் பிடில் (தி-20வ); சாம்பசிவய்யர் வீணை (ம-22வ); சுப்பய்யா பாகவதர் பாட்டு (தி-25வ) எம். டி. பார்த்த சாரதி பாட்டு (தி-27வ) முதலியவற்றை முதலில் குறிப்பிடலாம். அடுத்த படியாக் குன்னக்குடி வெங்கடராமய்யர், மாயவரம் கிருஷ்ணய்யர், டி. கே. ரங்காசாரி, சீதாராம பாகவதர், எஸ். நாகநாதய்யர், மதுரை மணி அய்யர், யதுகிரி, விஜயலக்ஷ்மி நடராஜன், ஜே. தர்மாம்பாள், வடக்கன்சேரி மணி, எம். கே. தியாகராஜ பாகவதர், சுந்தரி தம்பி முதலியோரின் கச்சேரிகளை குறிப்பிடலாம். பொன்னையா பிள்ளை, மஹாராஜபுரம், பாருபள்ளி முதலியவர்களின் கச்சேரிகள் இம்முறை எதிர்பார்த்தபடி அமையவில்லே.

## 11. சென்ற மாதத்திய நாடகங்கள்.

நாடகங்களை எடுத்துக்கொண்டால் திருச்சியில் ஒலிபரப்பப்பட்ட மூன்று நாடகங்களைப்பற்றி முதலில் குறிப்பிடவேண்டும். "புகழேந்தி சம ரஸம்" நன்ருக நடிக்கப்பட்டது. ஸ்ரீ சுப்பனை ராஜாவாக நடிக்கச் சொன் ஞல்கூட தான் சுப்பன் என்பதை மறக்கமாட்டான் போலிருக்கிறது! "சங்கிலி கருப்பன்" என்ற நாடகத்தில் சுப்பன் நடிப்பும், பொதுவாக ஹாஸ்யச் சுவையும் நன்ருயிருந்தது. "நாரை விடு தூது" என்ற நாடகம் மிகவும் ரஸித்தேன். சென்னையில் நடந்த நாடகங்களுள் "லட்டா? நோட்டா?" என்றது சுமாராக விருந்தது. 12வ யன்று நடிக்கப்பட்ட "வாழ்க்கைச் சித்திரம்" என்ற நாடகத்தின் சாராம்சம் ஏற்கெனவே வேறு பெயரில் நடிக்கப்பட்டது நன்ருக ஞாபகமிருக்கிறது. இம்மாதிரி ஒரே பழங்கதையை வேறுவேறு பெயர்களில் ஒலிபரப்புவது நன்றுயில்லே.

லா:—சொற்பொழிவுகள் விசேஷமாக ஒன்றுமில்லேயோ?

## 12. ஒரு விவாதம்.

நி:—ஆங்கிலத்தில் பல ஒலிபரப்பப்பட்டன. தமிழில் "விவாகம் அவ சியமா, இல்லேயா?" என்று ஒரு விவாதம் நடந்தது.

லா:—உயிருடனிருப்பதற்குக் காற்று அவசியமா இல்லேயாயென்று கேட்பதுபோலல்லவா இருக்கிறது இந்த விஷயம்?

நி:—மிருகத்திற்கும், ஆறறிவுபடைத்த மனிதனுக்கும் உள்ள முக்கிய மான வித்தியாஸம் விவாக விஷயத்தில்தான். இது விஷயமாகப் பேசுவ தென்ருல் நேரம் போவதே தெரியாது; மணிகணக்கில் அளந்துகொண்டே போகலாம்.

லா:—ஆமாம். இன்று இத்துடன் நிறுத்துவோம்; நேரமாகிவிட்டது. உத்திரவா?

நி:—நல்லது ஸ்வாமி! க்ருபை இருக்கட்டும்.

# கெட்டிக்காரன் புளுகு

(A. முருகையன், கடலூர்.)

பூவல்லியை சேளகன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனது மந்திரி பொய் பேசுவதில் கெட்டிக்காரன். ராஜாவிடம் பொய் பேசாதவன்போல் நடிப்பதில் சூரன். அவனுக்கு பணப் பேய் பிடித்து ஆட்டிற்று. பேராசை என்னும் விஷம் தலைக்கேறியது. ஒரு நாள் இரவு 12 மணிக்கு யாருக்கும் தெரியாமல் அரண்மனையில் புகுந்து ராஜாவின் தலைமாட்டில் இருந்த சாவியை தெரியாமல் எடுத்து பொக்கிஷத்தைத் திறந்து அளவற்ற பணத்தை எடுத்துக்கொண்டு அப்பொக்கிஷச் சாவியை தான் திருடியது தெரியாமலிருக்கும் பொருட்டு பொக்கிஷக்காவல் சேவகன் வீட்டில் வைத்துவிட்டான். பொழுது விடிந்தது. ராஜா "பொக்கிஷத்தில் திருட்டுப் போயிருக் கிறது; சாவிகூடக் காணவில்லை. யார் திருடி இருப்பார்கள்?" என்றான். மந்திரி யோசனை செய்வதுபோல் பாசாங்கு செய்து விட்டு "அச்சாவி பொக்கிஷக்காவல் சேவகன் வசம் இருக்கும்" என்று கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொன்னான். அவ்விதமே சாவி அகப்படவே அவனை விசாரித்ததில் 'நான் எடுக்கவே இல்லை' என்றான். மந்திரி குறுக்கிட்டு "இவன்தான் திருடன்" என்றான். ராஜாவும் நம்பி, சேகவனைப் பார்த்து "இன்னும் எட்டு நாளுக்குள் திருடிய பணத்தைக் கொடாவிடில் தூக்கு தண்டனை" என்று கூறி விட்டான். எட்டு நாட்களும் கழிந்தன. சேவகன் எடுத்தால் அல் லவோ கொடுப்பதற்கு? பாவம்! சேவகன் தூக்கு மேடைக்குத் தயாராக்கப்பட்டான். கடவுள் கண் திறந்தார். ராஜா ஓடிவந்து சேவகனை இறக்கி விட்டு, மந்திரியை தூக்கிலிடச் சொன்னான். இது யாவரையும் திடுக்கிடச் செய்தது. ராஜா ஜனங்களைப் பார்த்து "மகாஜனங்களே! நான் நேற்று இரவு நகர் சோதனைக்குச் சென்ற போது மந்திரி வீட்டில் நின்று ஒட்டுக்கேட்டேன். அப்பொழுது மந்திரி தன் மனைவியைப் பார்த்து "நான் அல்லவா இவ்வளவு பணத் தைத் திருடினேன்? இதை நைஸா சேவகன் தலைமேல் பழிசுமத்தி விட்டேன். அம்மூட அரசனும் நம்பி அவனை தூக்கிலிடச் செய்து விட்டான். பார்த்தாயா என் கெட்டிக்காரத்தனத்தை?" என்று சிரித் தான். ஆகையால் இவனே திருடன்" என்று ருசுப்படுத்தினான். ஜனங்கள் யாவரும் பிரமித்து நின்றார்கள்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளியாகும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.




கல்யாணி:—என்ன மங்களம்! நான் வந்தவுடனே ரேடியோவை நிறுத்திவிட்டாயே! நான் கேட்கக்கூடாதா!

மங்களம்:—போதும். நல்ல அழகான பாட்டாயிருந்தால் இன்னும் கொஞ்சநேரம் கேட்கலாம். இப்போதுதான் வரவர ரேடியோவில் கிராமபோன் ப்ளேட்டுக்குத்தான் அதிக சலுகை காட்டுகிறார்கள். நாம் தினம் வீட்டில் கேட்ட ப்ளேட்டுக்களையே திரும்பத் திரும்பக் கேட்கும் தலைநோயைக்கூட பொறுக்கலாம்; அசந்தர்ப்பமாயும், அபசகுனம்போன்றதுமான ரிகார்டை யார் கேட்பார்கள்? நீயே சொல்லு. இப்போ பாடிய பாட்டு என்னது தெரியுமோ! "சாவுவராதா! தெய்வம் சோறுதராதா!" என்று பாடிற்று. இன்று வீட்டில் குழந்தைக்கு மூன்றாவது பிறந்த நாள். சுபமாக நாம் நினைத்திருக்கையில் 'சாவுவராதா!' என்று பாடினால் மனத்தில் திக்கென்று தைத்தது. அதனால்தான் நிறுத்திவிட்டேன்.

சுமதி:—நீ சொல்வது வாஸ்தவம் மங்களம்! சிற்சில சமயம் காதால் கேட்கமுடியாத ப்ளேட்டுக்களைப் போட்டுவிடுகிறார்கள். அப்போது என்னமாயிருக்கு தெரியுமா! ஒருதினம் காலையில் நான் ஸ்வாமிக்குப் பூஜை செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் ரேடியோவில் ஒரு ரிகார்டு அலறியது பாரு; என்னைத் தூக்கிவாரிப்போட்டது. "மஞ்சள் போச்சே! குங்குமம் போச்சே...

இந்துமதி:—ஐயையோ! போதும் நிறுத்தம்மா! நிறுத்து. இதென்ன கண்றாவிப் பாட்டு? ஏன் மங்களம்! ரேடியோக்காரர்கள் இதை கவனித்துப் போடமாட்டார்களா! அதோடு முன்பெல்லாம் வெள்ளிக்கிழமை காலையில் மங்களகரமாய் மேளக்கச்சேரி திருச்சியில் வைத்தது வெகு அழகாயும், ஆனந்தமாயும் இருந்தது. அநேக வீடுகளில் அந்த வேளைக்கே அம்பாள் பூஜை செய்ததை நான் கண்ணாரக் கண்டேன். இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். அதுபோனாலும் போகிறது. சமயாசமயம் அறிந்து கிழமைகளை கவனித்து ரிகார்டுகள் போட்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

பானுமதி:—பாழாப்போன டாக்கி ரிகார்டுகள் வந்தாலும் வந்தது. அவைகளில் கதைக் கேற்றாப்போல் உள்ள பாட்டுக்களில் எத்தனையோ அசம்பாவிதமாயிருக்கிறது. இவைகளைக் கவனியாது எத்தனை பேர்கள் கல்யாண வீடுகளில் போட்டுக் கொலை செய்கிறார்கள் தெரியுமா! ஆரம்பத்திலேயே 'ஐயகோ!...கொடும்பாவி...சோதனையோ'...முதலிய பதங்களைப் பாடி அலறுகிறது. இதைக் கேட்கும்போது எனக்கு உடம்பே எரிகிறது தெரியுமா!

கல்:—வித்வான்களின் ப்ளேட்டெல்லாம் மறைந்துபோய் இந்தமாதிரி குப்பைகளெல்லாம் தலைவிரித்தாடுகின்றன. ராகமா! பாவமா! கம்பீரமா! அழகா! ஜீவனா! ஊஹூம். எல்லாம் ஸைபர்தான். ஹிந்தி மெட்டுக்கள் அகப்பட்டாலும் அகப்பட்டது; அதில் நம்ம பாஷையை சாஹித்யமென்ற பெயரால் அமைத்துச் சித்திரவதை செய்கிறார்கள். ஏதோ ஒரு சில ஹிந்தி மெட்டுக்களுக்கு நம் சாஹித்யம் பொருந்தி அழகாயிருக்கிறதேயன்றி கண்டதெல்லாம் இழுத்தால் நாராசம்போலல்லவா இருக்கிறது.

மங்:—நாராசம் என்று மட்டும் சொல்லாதே. அல்லாசாமி பண்டிகையில் சிலர் வேஷங்கள் போட்டுக் கூத்தாடுகிறார்கள் பாரு; அந்த வேஷப் பொருத்தம் எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் இந்த மெட்டுப் பொருத்தமும் இருக்கிறது. இன்னொரு வேடிக்கைபாரு; நம்மவர் கட்டு இரவல் வாங்கும் புத்தியே அதிகரிக்கின்றது என்பதற்கு டாக்கிப் பாட்டுக்கள் ஒன்றுபோதாமல், பள்ளிக்கூடங்களில் சிறுமிகளுக்கு சிறிய நாடகம் கற்றுக்கொடுக்கிறார்களே, அதிலும் இதே மெட்டுக்கள்தான் தாண்டவமாடுகின்றன. பாரதியார் பாட்டுப் போட்டி, பிரபந்தப் பாட்டுப் போட்டி முதலியவைகளிலும் அருமையான பாடல்களையும் பாசுரங்களையும் அதே டாக்கி மெட்டில் போட்டுக் கொலைசெய்து பாடத் தெரியாமல் இழுத்தடித்துத் தடமாடும் கண்ராவியை என்னென்பது? நல்ல அழகான கர்னாடக ராகத்தில் இசைத்துப் பாடினால் அது பரிமளிக்காதா! ஏதோ ஒன்றிரண்டு ஒற்றுமையாக அமைந்தால் வைத்துக்கொள்ளலாமேயன்றி எல்லாவற்றிற்கும் ஹிந்தி மெட்டுகளைப் போட்டு வாட்டினால் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

ஸாவித்திரி:—உனக்கும் எனக்கும் பிடிக்காவிட்டால் உலகம் முழுகி விட்டதா! டாக்கி முதலாளிகளும், பள்ளிக்கூடத்து சங்கீத உபாத்தியாயினிகளில் சிலரும் அதற்கு அடிமைகளாகிவிட்டதால் அந்த மெட்டுக்களை கொட்டியளக்கிறார்கள். எங்க ஊரில் சேஷிப் பாட்டி இருக்கிறாள். அவள் 'பாட்டுக் கட்டுகிறேன். எனக்குக் கவி எழுதும் சக்தி வந்துவிட்டது' என்று கூறிப் பாட ஆரம்பித்துவிடுவாள். எப்படியிருக்கும் தெரியுமா!" பகவன் நாமத்தைச் சொல்ல வாய்பூட்டுபூட்டிவிட்டதோ! கொழக்கட்டை அடைத்துவிட்டதோ! நித்தியம் காலையில் பகவானை சேவித்தால், பண்ண பாவங்கள் பறந்தோடி பூடும்''

இதுதான் எங்க சேஷி பாட்டியின் கவி. வார்த்தைகளைப் பாட்டாகப் பாடுவாள். அதிலாவது அவளுடைய பக்தியைக் குறிப்பிடுகிறது; வாயால் சொன்னாலும் பாவந்துலையும். கருத்துமில்லாது அர்த்தமுமில்லாது அழகோ, பாவமோ ஒன்றுமில்லாது சிலர் பாடுவதை எப்படித்தான் கேட்பது? மகா கோரம்மா!

சுமதி:—சில வருஷங்களுக்கு முன்பு புண்யமூர்த்திகளான தியாகய்யர் தீக்ஷிதர், சுப்ரமண்ய ஐயர் கோபாலதாசர், சேஷய்யங்கார், கோபால கிருஷ்ண பாரதி, அருணாசலக் கவி, வேதநாயகம் பிள்ளை முதலியவர்களின் ஜீவன் ததும்பிப் பொங்கும் கவிகளும், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பிரபந்த ஸாரம் முதலிய பாடல்களும் உலாவிக்கொண்டிருந்தன. இப்போ பாரு. தடி எடுத்தவனெல்லாம் வேட்டைக்காரன். என்பதுபோல் அனேகம் பேர்கள் பேசும் வார்த்தைகளைக்கூட கவியாக்கிவிடுகிறார்கள். அவைகளைத் தாராளமாய்ப் பாடுவதற்கு டாக்கிகளும், கிராம்போன் ரிகார்டுகளும்,ரேடியோக்களும் அபாரமான சாதனங்களாய் அமைந்துவிட்டன. இக்காலத்தில் ஒரு சிலருடைய கவியைத் தவிர மற்றவைகளைக் கவி என்று எப்படிக் கூற முடியும்? அவைகளை எப்படித்தான் பாடமுடியும்?

இந்து:—உன்னைப் பாடும்படி யாராவது கேட்டார்களா! உனக்கு இஷ்டமில்லை என்றால் நீ உன் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்காதே. அவைகளை விரும்பிப் பாடுகிறவர்கள்தானே இக் காலத்தில் அதிகம். அதிலும் ஹிந்தி மெட்டு என்றால் சொர்க்கப் பதவியல்லவா! நான் ஒரு பள்ளிக்

கூடத்து ஏதோ ஒரு விழாவுக்குச் சென்றிருந்தேன். அங்கு முதல் பிரார்த்தனை கீதமாக சிறுமிகள் சிலர் பாடினார்கள். ஹிந்தியில் சக்கை போடு போட்ட 'சுனோ சுனோ' மெட்டில் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று ஒரு டாக்கி இசைத்தட்டுப்பாட்டு உலகில் பெரும்பாலான மக்களையே அந்தப் பாட்டு மயக்கிவிட்டது பாரு. அவ்வளவு தான். அந்த பள்ளிக்கூடத்தில் மட்டும் அதை விட்டுவிட முடியுமா! குழந்தைகள் தம்தம் இஷ்டமான த்வனியில் பிரம்மாண்டமாக எடுத்து,

ராமா! ராமா! காக்கவருவாய்! இப்பவே!
கஷ்டத்தைப் போக்கவருவாய்! இப்பவே!

என்று பாடினார்கள். சபையில் ஒரு பக்கம் கொல்லென்று நகைப்பு பெரிதாக எழுந்தது.

**கல்:**—பேஷ்...அருமையான கவி...ஏனோ இந்த மோகம்! பாட்டு இசைக்கத் தெரியாவிட்டால் எத்தனையோ மகான்கள் பாடியுள்ளதை ஆனந்தமாகப்பாடி இன்புறக்கூடாதா! மங்களம்! ரேடியோவைத் திருப்பு. இப்போது என்ன பாட்டு வருகிறது பார்க்கலாம்'' என்றாள்.

மங்களம் உடனே ரேடியோவைத் திருப்பினாள். சற்று நேரத்திற்கெல்லாம் கடபுடா சப்தத்தின் மத்தியில், "ஆனந்தம் என் சொல்வேனே!" என்ற அதிமதுரகானம் கேட்டது.

அப்பாடா! மங்களகரமான வார்த்தை காதில் விழுந்ததே. அதுவே போதும். இந்த பாட்டுக்கு ஹிந்தி மெட்டு எத்தனை அழகாய்ப் பொருந்தியிருக்கிறது பாரு. இப்படி அமைவது எங்கோ ஒன்றுதானே தேருகிறது.

—வை. மு. கோ.



# விகட வெடிகள்

" விருச்சிகம் "

சுப்பன்:—ச்வாமிகளே! கோயில் ப்ரஸாதமாயிற்றே என்று வாங்கினேன்; தோசையில் இத்தனை கருப்பும், இட்டிலியில் இவ்வளவு பச்சையும் இருக்கிறதே! இதென்ன அநியாயம்! ஈயம் பூசின பாத்திரமில்லையா!

குப்பன்:—ஸ்வாமிகளே! உங்களுக்கு சூக்ஷ்ம அர்த்தம் தெரியவில்லையே! பகவானை கருமுகில் வண்ணன், கருமாணிக்கம், பச்சைமாமலை போல் மேனி என்றெல்லாம் துதிக்கிறோமல்லவா! அந்தச் சாயல் பகவத் ப்ரஸாதத்திலும் ப்ரதிபலிக்கின்றது. பக்தியாய் அமுது செய்யும்.

* * * * *

கோபு:—ஏண்டா பாபு! பள்ளிக்கூடத்து வாத்தியார் ஆமண்டயாளுக்குக் குழந்தை பிறந்தா நமக்கு அன்னிக்கு லீவு விடுவாளோன்னோ!

பாபு:—போடா! வாத்தியாராமண்டயாளுக்குப் பிறந்தா நமக்கென்னடா லீவு? வாத்தியாருக்கே குழந்தை பிறந்துவிட்டால் அவர் பள்ளிக்கூடம் வரமுடியாது. லீவு விட்டுடுவா!

* * * * *

சாமு:—ஏண்டா குல்லாப்போட்டுக்காதே பள்ளிக்கூடத்துக்குஒட்றே?

சோமு:—இன்னிக்கு ரஸகுல்லா கொண்டுவந்தாதான் பாடம் சொல்லித்தருவேன் இல்லாவிட்டா தொரத்திப்புடுவேன்னு வாத்தியார் அடிச்சார். வீட்டிலே அழுது புரண்டு அம்மாவே ரஸகுல்லா பண்ணித்தாச் சொல்லி எடுத்துண்டு ஓடிவறேன். அதனாலே வாத்தியார் தலெகுல்லா இல்லாததற்கு அடிக்கமாட்டார்டா!

* * * * *

பிச்சு:—என்னடா எழவாயிருக்கு. சக்கரைப் பொங்கலில் இத்தனைக் கல்லு இருக்கே! இது உடம்புக்கு ஆகுமாடா!

கிச்சு:—இது கோயில் சக்கரைப் பொங்கல்டா! ஸ்வாமிக்கு நிவேத்தியம் பண்ணது. அதனால் கல்லு ஒண்ணுமே பண்ணாது. ஜீரணமாகிவிடும் பயப்படாதே.

* * * * *

கண்ணன்:—எப்பப்பாத்தாலும் எங்கப்பாவும் அம்மாவும் சண்டே போட்டுண்டே இருக்காளே! அதுபோல ஒங்காத்துலே போட்ராளாடா?

பொன்னன்:—ஊஹூம். சண்டேங்கிற பேச்சே இல்லேடா! என் இல்லேங்கிற ரகஸ்யம் ஒனக்குத் தெரியுமா! எங்க அத்தே, பாட்டி, ஒத்தரும் வீட்டிலே இல்லே; அதான் சண்டெயும் இல்லெ.

* * * * *

கிட்டு:—ஏண்டா! இன்னிக்கு பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போடப் போறே!

மொட்டு:—ஏன் தெரியுமா! எங்க வீட்டு நாயி, ஒவ்வொரு தரத்திற்கும் நாலும் அஞ்சுமா குட்டிபோடற கணக்குலே இப்போ இருபத்தி அஞ்சாங்குட்டி இன்னிக்குப் போட்டது. அதுக்கு ஸில்வர் ஜூபிலி கொண்டாடப்போகிறோம்டா! நீயும் என்னோடே வந்துடு.

* * * * *

ராஜு:—ஏண்டா! ஒங்க அப்பாகிட்ட அம்மா பயப்படுவாளா! அம்மாகிட்ட அப்பா பயப்படுவாரா!

சேசு:—ரெண்டுபேரும் எங்கிட்டதான் பயப்படுவா! ஏன் தெரியுமா! நான் கேட்டதே குடுக்காட்டா கணத்துலே விழுந்துடுவேன்னு சொல்லுவேன். அவ்வளவுதான். —வை. மு. கோ.

---

## தயவுசெய்து

சென்ற இதழின் (நவம்பர்) 19-வது பக்கத்திலுள்ளதைக் கவனமாய்ப் படியுங்கள்.

மணியார்டர் செய்யும்போதும், கடிதங்கள் எழுதும்போதும் தங்கள் சந்தாநம்பரைத் தெரிவிக்கவும். தமிழ்நாடு தவிர மற்ற பிரதேசங்களிலுள்ள நேயர்கள் தங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் விவரமாக எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

# அநுபவ நீதிசாரம்



1. இரண்டு பிச்சைக்காரர்கள் ஒரே சமயத்தில் ஒரு வீட்டிற்கு வந்தால் அதில் ஒருவன் மற்றவரை மிரட்டி "வீட்டில் யாருமில்லை" என்று அதிகாரமாய் வீட்டுக்காரனைப்போல் விரட்டியடிக்கிறான். அந்த மனிதன் இரண்டுபேர் அரிசியையும் தானே வாங்கிக்கொள்ளும் ஆசையில் அம்மாதிரி செய்கிறான். அடுத்த நிமிடம் வாழைப்பழத்தோல் சறுக்கிவிழுந்து உள்ளதும் போய்விடுகிறது. இருவரும் ஒருபிடி அரிசி வாங்கிப் பிழைக்கலாமென்ற நோக்கமில்லாதவனுக்கு இதுதான் கதி.

2. ஐம்பத்துக்குப் பாடுபடுகிற எந்த மனிதரிடமும் உண்மை என்பது காணமுடியாது. உண்மைக்கு உழைப்பவர்களிடம் படாடோபம் சிறிது இருப்பினும் அதுவும் மேன்மையாகவே தோன்றும்.

3. வினா:—இலவசமாக சாமான்கள்சேர்ப்பதற்கு வழி ஏதாவதுண்டா?

விடை:—பேஷாயுண்டு. நவராத்திரிப் பண்டிகையில் குழந்தைகள் சகிதம், கொலுவு வைத்திருக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் தினம் சென்றால் வெகு சுலபமாக வெத்திலைப் பாக்கு, பழம், தேங்காய், சுண்டல், கல்கண்டு, பப்பெர்மெண்டு இத்யாதி சாமான்கள் ஏராளமாகச் சேர்க்கலாமே. என் மனைவி இதில் கைதேர்ந்தவள். இந்த நவராத்திரியிலும், துலாமாஸப் பிறப்பன்று காவேரிக் கரையிலும் சம்பாதித்த சாமான்களைவிற்று சுலபமாய் 7 ரூபாய் சேர்த்துவிட்டாள். 3 ரூபாயில் அவளுக்கொருபுடவையும். ஒன்னரை ரூபாயில் எனக்கொரு ஜதை சாதா வேஷ்டியும், குழந்தைகளுக்கு உடைகளும் வாங்கித் தீபாவளி கொண்டாடிவிட்டோமே...

முதல்வன் :—அடிசக்கை! இந்த தந்திரம் எனக்குத்தெரியாது போயிற்றே அடுத்த வருடம் ஒரு கை பார்த்து விடுகிறேன்.

4. எவ்விதமான காரணமுமின்றி டாக்டரை காக்காபிடிக்கும் தனது செய்கையை பிறர் அறியவில்லை என்று எண்ணிக்கொண்டு சிலர், பிறர் டாக்டரை காக்காய் பிடிப்பதாக ஒரு வித நங்கு காட்டும் பாவத்துடன் பேச முன்வந்துவிடுகிறார்கள். ஆனால் அந்த டாக்டரோ அவர்கள் காக்காய்ப் பிடிப்பதை சற்றும் லக்ஷ்யமே செய்யாது கேட்ட கேள்விக்குக்கூட பதில் பேசாது போய்விடும் ரகஸ்யம் தெரியாதா!

5. உள்ளே ஒன்றுவைத்து மேலுக்கு உறவாடிக் காரியத்தை சாதித்துக்கொண்டு செல்லும் குள்ளநரிகள் அதற்குப் பிறகு சுகப்படுவதேது? கலவரம், மனத்துடிப்பு, போலீஸ் வழக்கில் சிக்குண்டு அவதியுறுதல், பிறரால் தூற்றப்படுவது முதலிய சன்மானங்கள்தான் கிடைக்கின்றன. கடவுள் ஒருவரில்லையா!

6. ஒன்றைப் பார்க்க ஒன்று ஆச்சரியமாகத் தோன்றுகிறது. அந்த ஒன்று பழமையாகிவிட்டால் இன்னொன்று கவனத்தை இழுக்க உதயமாகிறது. இதுதான் ஈச்வர ச்ருஷ்டியின் லீலாவினோதம்.

—வை. மு. கோ.




ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

**22**-வது மேளகர்த்தா.

## க ர ஹ ர ப் ரி ய

ஜன்ய ராகம்.

## கா லி கா.

ஆரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ | ரி | க | ப | த | நி | ஸ் |
| | ச | ஸா | | ச | கை | |

அவரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ் | நி | த | ப | க | ரி | ஸ |
| | கை | ச | | ஸா | ச | |

ராகம் : காலிகா. சதுரஸ்ரஜாதி த்ரிபுட.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1 | ; ; ; ● தா நீஸ்ா நீ தா<br>வச் சி ஞு | பா ; ; - கா<br>தோ பல் | ரீ ஸா ரீ - கா<br>கு மி |
| 2 | பா ; ; ● த நி ஸ்ரி ஸ்ா நீ தா<br>ரா வச் சி ஞு | பத நிதபா - கப<br>தோ பல் | க ரி ஸா ரீ - கா<br>கு மி |
| 3 | பா ; ; ● தநி ஸ்ரி க்ரி ஸ்நி தா<br>ரா வச் சி ஞு | பத நிததப - கப<br>தோ பல் | த ப கரி ஸரி- கா<br>கு மி |
| | பா ; ; ● கா பா கா ரீ ரீ<br>ரா வ ந ஜ ந ய | ஸா ; ; - ஸ நி<br>ஞு ரா | த நி ஸரிகப- தநி<br>மா |
| | ஸ்ரிஸ்நிதப ● | | |

## அநுபல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ; ; ● | ஸ்ா நீ தா நீ தா | பா ; ; - கா | பா தா நீ -ஸ்ா |
| | | முச் ச டை ன | மோ மு | னு ஜூ ட |
| 2 | ரீ ; ; ● | ஸ்ா நீ த நி ஸ்நி தா | பத நிதபா - கா | பா தா நீ-ஸ்ா |
| | நீ | முச்ச டை ன | மோ மு | னு ஜூ ட |
| 3 | ரீ ; ; ● | ஸ்நிதநி ஸ்ரி ஸ்நிதா | பத நிததப - கா | பா தா நீ-ஸ்ா |
| | நீ | முச்ச டை ன | மோ மு | னு ஜூ ட |
| | ரீ ; ; ● | க்ா ரீ ஸ்ா ரீ க்ா | ரீ ; ; - ஸ்ா | நீ தா நீ - தா |
| | இச் | ச டகா சு | கொன் ஞ | னு |
| | பதநிதபா ● | | | |
| | ரா | | | |

## சரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| | ; ; ; ● | தா நீ தா ; நீ | தா ; ; - நீ | தா பா ; - கா |
| | | பங் க ஜா | க்ஷி லோ | லு |
| | ரீ ; ; ● | கா ரீ ஸா ; நீ | தா ; ; - நீ | ஸா ரீ ; - கா |
| | ட | அங் க ஜ | ஸ்வ ரூ | பு |
| | பா ; ; ● | | | |
| | ட | | | |
| 1 | ; ; ; ● | ஸ்ா நீ தா நீ தா | பா ; ; - கா | பா தா நீ-ஸ்ா |
| | | சங் க ச | க்ர தா | ரு |
| 2 | ரீ ; ; ● | ஸ்ா நீ த நி ஸ் நி தா | பத நிதபா - கா | பா தா நீ-ஸ்ா |
| | ட | சங் க ச | க்ர தா | ரு |
| 3 | ரீ ; ; ● | ஸ்நிதநி ஸ்ரி ஸ்நிதா | பத நிததப - கா | பா தா நீ-ஸ்ா |
| | ட | சங் க ச | க்ர தா | ரு |
| | ரீ ; ; ● | க்ா ரீ ஸ்ா ரீ க்ா | ரீ ; ; - ஸ்ா | நீ தா நீ - தா |
| | ட | மங் கள கோ | தா | லோ |
| | பதநிதபா ● | | | |
| | லு ட | | | |

## முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| ● | தநீ - தநிஸ்நித - பத | , - பதநிதப - கரி | , ஸ-நிதாநி - ஸரி |
| , க பா ; ● | கரிஸா-நிஸரிக- பத | நீ - தபகரி - கப | தா-நிஸ்ரிஸ் - நித |
| ப த நீ ; ● | ஸ்ரிக்-ஸ்ாரி-நிஸ்ரி-நி | , ஸ்-நிதபத- நிஸ் | ரி- ஸ்ாநிதப- தநி |
| ஸ் ரி ஸ்ா ; ● | நிஸ்ரிக்-ரிஸ்நித- பத | நிஸ்-நிதபதநி- ஸ் | , நி த ப-கா ரி ஸ |
| நி-ஸகரிகப ● | | | |

கீழ்கண்ட இடங்களில்

நவம்பர் 22௳ முதல் வெற்றி விஜயம்

செய்து வருகிறது

இந்தியாவிற்கே முதல்

# ஷேக்ஸ்பியர் நாடகம்

(தமிழ் படமாக)

# "ஷைலக்"

டைரெக்ஷன் :

**சாமா—ராமு**

| | | |
|---|---|---|
| டைமண்ட் | — | கும்பகோணம் |
| கிருஷ்ணு | — | காரைக்குடி |
| ராஜா | — | கோயம்புத்தூர் |
| லக்ஷ்மி | — | பெஜவாடா |
| கேஸரி | — | எல்லூர் |

மற்றும்

மதுரை, பாண்டிச்சேரி, திருச்சி, சேலம், தூத்துக்குடி,

தஞ்சாவூர், கள்ளிக்கோட்டை

முதலிய இடங்களில்

அதிசீக்கிரமே திரையிடப்படும்.

**இது : பாரத் பிக்சர்ஸ் தயாரிப்பு**

# 33

எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. வானமும் தன் துக்கத்தைத் தெரிவிப்பதுபோல் மழை பொழிந்தது. காற்றும் கடுமையாய் அடித்தது. பேரிரைச்சலுடன் மரக்கிளைகள் ஆவேசமாய்க் கைவிரித்தாடின. அந்ததோற்றம் ஜமீந்தாரையும், அவருடைய மூத்த மருமகனையும், மதுசூதனனின் மனைவியையும் சாபமிட்டுத் திட்டுவதுபோலிருந்தது.

கணவன் அநியாயமாய் சிறைப்பட்டுவிட்டான் என்பதைக் கேட்ட உத்தம மனைவியாயின் உள்ளம் துடித்து நெருப்பின்மீது பட்ட புழுகெனத் துடிப்பாளல்லவா! அவள் உயிரே நீங்கியது போலாகிவிடுமன்றோ! நாகரீக நங்கையாகவிருப்பினும் மனந் தவிப்பாள். ஒரு வகையிலும் சேராத அந்த ராக்ஷஸி "புருஷன்கைதியாகியதற்கு அவனேதான் காரணம், ஜமீந்தாரின் த்வேஷம் ஆகுமா! அவரிடம் அடங்கியிருந்தால் இம்மாதிரி ஆபத்தும் அவமானமும் வராதல்லவா! வேண்டுமென்று செய்துகொண்டால் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்" என்று சற்றும் பாசமில்லாது திட்ட வாரம்பித்ததைக் கண்ட ஊர் ஜனங்கள் அவளைக் காறியுமிழ்ந்தார்கள்.

மானஹீனமற்ற ஜந்துவை அவளுடைய பெற்றோரும் மற்றோருங்கூட வெறுத்தார்கள். கூடைக்காரி முதல் குப்பைக்காரன் வரையில் திட்டும் ஜென்மமாய் உலாவினள். கணவனைப் பார்க்க வேண்டுமென்கிற பாசமோ, அவனிடம் ஒரு சிறிதாவது அனுதாபமோ உண்டாகவே இல்லை.

மதுசூதனனின் பெற்றோரும் வளர்த்தோரும் குன்றிப்போய் விட்டார்கள். ஜமீந்தாரிடம் அவர்கள் எத்தனையோ கெஞ்சிக் கூத்தாடி மன்றாடிக் கேட்டுக்கொண்டதெல்லாம் விழலுக்கிறைத்த நீர் போலாகியது. ஜமீந்தாரை வெறுக்காத ஜனமே இல்லை.

நர்மதையின் உள்ளம் துடித்தது. தந்தையின் காலைப்பிடித்துக் கொண்டு சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் வேண்டிக்கொண்டது விபரீதமாக முடிந்து, அவள்மீது அடாத பழியைச் சுமத்தி அபகீர்த்திக்கு உள்ளாக்கிவிட்டார்கள். என்ன செய்வாள் பாவம்! இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. பெற்றோர்களிடம் இம்மாதிரி சிறுமைப்பட்டு உயிர் வாழ்வதைவிடத் தன் கணவனிடமே சென்று பணிப்பெண்ணாகவாவது ஏற்றுக்கொள்ளும்படியாக

வேண்டி ஒட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்தலாம் என்று அவள் மனம் தீர்மானித்தது.

அவ்வெண்ணத்தைத் தன் தாயாரிடம் தெரிவித்தாள். நேர் எதிரிடையான பதில் கிடைத்ததுடன் தங்கள் குலத்தின் கௌரவத்தையே குலைக்கும் காரியம் செய்ய நான் விடமாட்டேனென்று கண்டிப்பான சட்டமும் போட்டுவிட்டாள். பெத்த தாயின் மனமே அங்ஙனமிருந்தால் சிறுமி என்ன செய்வாள் பாவம்! தந்தையோ அந்த சம்பவத்திற்குப் பிறகு நர்மதையுடன் பேசுவதுகூட இல்லை. அவள்மீது அநியாயமான எண்ணத்தை மனத்தில் வளரவிட்டு அதற்காகவே நர்மதையை வெறுத்தும் கோபித்தும் வந்தார்.

இதற்கிடையில் மாதங்கள் வெகு வேகமாக உருண்டு ஓடிக்கொண்டே இருக்கின்றன. மதுசூதனன், தான் குற்றவாளியல்லவென்பதை வாதிக்க ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. அவனது பெற்றோர்களோ, பரம ஏழைகள். பணத்திமிரும், அதர்மமும் குடிக்கொண்ட ஜெமீந்தாருக்குமுன்பு எதுவும் பலிக்காது போய்விட்டதால் இந்த வேலைநிறுத்தத்திற்கு அவன்தான் காரணம் என்ற குற்றம் ஊர்ஜிதமாகி மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

மூன்று வருஷம் தண்டனை என்று நீதிபதி தீர்ப்புக் கூறியதைக் கேட்டதும் மதுசூதனனின் உள்ளம் சற்றும் கலக்கமோ, திகிலோ அடையாது புன்சிரிப்புள்ள முகத்துடன் "ஸ்ரீராமா! ஜெய் ஸீதாராம்....ஸ்ரீ கிருஷ்ணாயநம.... சம்போ! மகாதேவா!" என்ற நாமங்கள் மலர் உதிர்வதுபோல் அவன் வாயினின்றும் உதிரும்போது நீதிஸ்தலத்திலிருந்த பலபேர்களுடைய கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்தன. ஜமீந்தாரைப் பலவிதமாகத் திட்டும் வசைகளும் உதிர்ந்தன.

ஜெமீந்தாரைச் சேர்ந்த ஆட்களில் சிலருக்கு இந்த காட்சி மனத்தை உருக்கியது. தாம் செய்த சதியான ஜோடிப்பினால்தானே இந்த உத்தமன் மூன்று வருடம் கடுங்காவல் தண்டனை அடைகிறான். ஐயோ! இந்த வதை நம்மைவிடுமா! என்று ஒருக்ஷண நேரம் நினைத்தார்கள்.

அடுத்த க்ஷணமே ஜெமீந்தார் கொடுத்த பணதேவதை கண் முன்பு காட்சி கொடுத்ததோடு "சீ! இதற்குத் தியங்காதே. இதையே ஓர் வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஜெமீந்தாரிடம் உன்

ணுயுள் உள்ளளவும் பணம் கறக்கலாம். அஞ்சாதே'' என்று ஒரு குண்டு தைரியம் கூறியதால் உடனே பழய எண்ணம் தலைகாட்டாது ஓடி மறைந்துவிட்டது.

ஜெமீந்தார் நீதிஸ்தலத்திற்கு வரவே இல்லை. அவரது தர்மபத்தினி மட்டும் திமிருடன் வேடிக்கைப் பார்க்கும் நோக்கத்துடன் அட்டகாஸமாக வந்து அமர்ந்தாள். மதுசூதனனின் பரிசுத்தமான தோற்றமும், சாதுத்தன்மையும், தூய ஹ்ருதயத்தின் பக்திப்ரபாவமும் அவன் கடைசியில் பகவந்நாமங்களை உச்சரித்துச் சென்றதும் பார்க்கப் பார்க்க ஜெமீந்தாரிணியின் மனத்தில் அவளையறியாத ஓர் இரக்கமும், பச்சாத்தாபமும் உதித்து விசித்திரமான மாறுதலை ஒரு விநாடியில் உண்டாக்கியதோடு "ஐயையோ! இத்தனை சாதுவான மனிதர்மீது வெடிகுண்டெறிவதுபோல் பழிகுண்டை வீசி மகாபாதகத்தைச் செய்துவிட்டோமே!'' என்கிற எண்ணம் மின்னல்போல் தோன்றி ஒரு விநாடி வதைத்தது.

அந்த எண்ணத்தின் அதிர்ச்சியில் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டு பளிச்சென்ற நோயும் உண்டாகி க்ஷணநேரத்தில் அவளைச் சித்திரவதை செய்துவிட்டது. குபீரென்று வெயர்வை வெள்ளம்போல் பொங்கி வழிந்தது. ஏதோ பயங்கரமான தோற்றங்கள் மனத்தில் ஒன்றன்பின் ஒன்று தோன்றி தடுக்கமுடியாத திகிலையும், கலக்கத்தையும் கொடுத்ததால் அவளுடைய நிலைமையே மாறிவிட்டது.

கண்ணீர் பெருக மனத்தடுமாற்றத்துடன் எழுந்து காரில் ஏற வந்தாள். வீதியில் கூடியுள்ள ஜனங்கள் ஜமீந்தாரைக் கண்டபடி திட்டி "இந்த மகாநுபாவனைச் சிறையிலிட்டப் பாவி வாழுவானு! விளங்குவானு! இவன் பூண்டற்றுப்போய் விடாதா! ஒரு சாதுவை பரதேசியை, நிரபராதியை, பக்திமானைச் செய்யும் வதை வீணுக விடுமா! தாயிக்குத் தலைப் பெண்ணை வாழாவெட்டியாய் வைத்து ஒரு சூடுபோட்டுக் கடவுள் காட்டியும் இன்னும் புத்திவராததால் விநாசகாலே விபரீதபுத்தி! என்பதற்கு ஏற்ப இன்னும் அனுபவிக்கப்போகிருன். நன்ருக அனுபவிக்கவேண்டும்'' என்று வயிறெரிந்து இடும் சாபத்தைக் கேட்டதும் ஏற்கெனவே கொந்தளிக்கும் ஜெமீந்தாரிணியின் வயிற்றில் பின்னும் இடி இடித்ததுபோல் சுறுக்கென்று தைத்தது.

நெருப்பில் பட்ட புழுகுபோல் துடித்தாள். இதுகாறும் யார்

திட்டியதும் எதுவும் காதில்படாது திமிருடனிருந்த மகாதேவிக்கு இன்று ஏற்பட்டுள்ள மாறுதலின் வியப்பு அவளாலேயே தாங்க முடியவில்லை. நேரே வீட்டிற்கு வந்தாள்.

ஜெமீந்தாரும் அவருடைய கையாட்களும் பெரிதாக நகைத்துக் கொண்டு "தொலைந்தான் பாவி. அவன் கர்வமும், கொட்டமும் அடங்கிற்று. இனிமேல் ஜெமீந்தாரின் பெருமையும், கண்ணியமும் செல்வாக்கும் நன்கு தெரியுமல்லவா! தலை துள்ளமாட்டானல்லவா?" என்று இறுமாப்புடன் கூறிக் கலகலவென்று சிரித்தார்கள்.

அச்சமயம் உள்ளே நுழைந்த ஜெமீந்தாரிணியைப் பார்த்து, "பலேபேஷ்! மூன்று வருடம்...முப்பத்தாறு மாதம், ஆயிரத்திச் சில்லரை நாள். அஹ்ஹஹா ஹ்ஹஹா...அடைபட்டுக்கிடந்து சாகட்டும். இதுகூட போதாது. இன்னும் பத்து வருஷம் தீட்டியிருக்க வேண்டும்...பார்த்தாயா! வேடிக்கை பார்த்தாயா! நன்ருகக் கையைக் கொட்டி நகைத்தாயா?" என்று மனைவியை அன்புடன் கேட்டார்.

அவள் இவர்கள் முகத்தைக்கூடப் பார்க்காமல் மௌனமாயும் சற்று ஆத்திரமாயும் உள்ளே போய்ப் படுக்கையில் தடாரென்று விழுந்தாள். எண்ணுததும் எண்ணி மனம் புண்ணுகித் துடித்தது. அச்சமயம் அவ்விட்டு வேலைக்காரர்கள் மதுசூதனனின் கவியாகிய, "அஞ்சாதே நெஞ்சமே" என்ற பாடலை அதி உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் இது மதுசூதனனின் கவிதான் என்பதை நொடியிலறிந்த நர்மதை ஓடோடி வந்து அந்த வேலைக்காரர்களை நோக்கி, "எங்கே! எங்கே! இன்னெருதரம் பாடுங்கள். அதே பாடலை இன்னெருதரம் பாடுங்கள்" என்று ஆவலுடன் கேட்டாள். வேலைக்காரர்கள் மீண்டும் பாடினுர்கள்.

அதைக்கேட்கும் நர்மதையின் உள்ளம் உருகிக் கண்ணீராய் வடிந்தது. தன்னை அறியாமலேயே அவள் வாயில், "அஞ்சாதே நெஞ்சமே அஞ்சனவண்ணனின் அபயமிருக்கையில்" என்று பாடி அகமகிழ்ந்தாள். இதை உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஜமீந்தாரிணி எழுந்து வந்து தன்னை அறியாத இன்பத்துடன், "எங்கே!.... அந்த பாட்டை மறுபடியும் பாடுங்கள். நர்மதா! நீயும் கூடப் பாடு. எங்கே! பாடு. பாடு" என்ருள். இதைக்கேட்டு எல்லோரும் வியப்புக்கடலில் மூழ்கினுர்கள். நர்மதைக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்கவே இல்லை. உடனே வேலைக்காரர்களைத் தாண்டி

விட்டுத் தானும் பாடவாரப்பித்தாள்.

இதற்குள் நர்மதையின் தங்கை அங்கு வந்தவள் இவர்களைப் பார்த்து நகைத்தபடியே, "அக்கா! இதே பாட்டை எங்க பள்ளிக் கூடத்தில் வாத்தியாரம்மாள் சொல்லிக்கொடுத்தார்கள். எனக்குக் கூட தெரியுமே...அந்த பஜனைச் சாமியார் பாடிய பாட்டாம் இது" என்றாள். "எங்கே! இதை நீயும் பாடு" என்று ஜெமீந்தாரிணி சொன்னாள். உடனே எல்லோரும் சேர்ந்து, ஆனந்தமும் ஆவேசமும் ததும்பப் பாடினார்கள். ஜெமீந்தாரிணியின் உள்ளம் பின்னும் பதின்மடங்கு உருகி மாறியது. "இத்தகைய ஆழ்ந்த பக்தியும், அறிவும், நம்பிக்கையும் உள்ள மனிதனுக்குப் பெரும் பாதகத்தைச் செய்யும்படி நாமும் தூண்டிவிட்டோமே!" என்று நினைக்கும்போது அவள் மனம் தத்தளித்தது.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த ஜமீந்தாரின் உள்ளத்தில் ஆவேசத் தீப்பொறி பறந்தது. "சீச்சீ! வெட்கங்கெட்ட மிருகங்களே! வேலைக்காரக்கழுதைகளுடன் சமமாக உட்கார்ந்து அந்த நாடோடிப் பயல்—கைதி—பாடியபாட்டைப் பாடிக்கொட்டமடிக்கிறீர்களா! உள்ளே போங்கள். உனக்கும் புத்தி கெட்டுவிட்டதா?" என்று பல்லைக் கடித்தவாறு தம் மனைவியையும் மகளையும் கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளினார். வேலைக்காரர்கள் மூலைக்கொருவராகப் புகுந்துகொண்டார்கள். ஜமீந்தாரிணியின் மனோ சஞ்சலம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்தது. தன் மாறுதலை நன்கு தெரிவிக்கும் முறையில் கணவனை நோக்கி "நீங்கள் இம்மாதிரி ஆத்திரப்படக்கூடாது. நானும் முதலில் புத்தியில்லாமல் பாழாகிவிட்டேன். மதுசூதனன் சாமானிய மனிதனல்ல. அவன் ஒரு தெய்விகப் பிறவியாகவே எனக்கு இப்போது தோன்றுகிறான். மகா பரிசுத்தவானிடம் நாம் பெரும் அபராதம் செய்துவிட்டோம். இந்தப் பழி நம்மை லேசில்விடாது. ஊர் நிந்தனையும், த்வேஷமும் இப்போது நமக்கு அதிகரித்துவிட்டன. நம்மை பகிரங்கமாக வீதியில் ஜனங்கள் கண்டபடிச் சாபமிடுகிறதை நான் என் காதாரக்கேட்டேன். கோர்ட்டில் அந்த மனிதனின் ஸ்வரூபத்தையும், சாந்தத்தையும் பார்த்த பிறகு என் மனம் மாறியதோடு நாம் செய்துவிட்ட சதியை எண்ணித் துடிக்கின்றது.

நிரபராதியை வதைத்த வதை நம்மை என்ன பாடுபடுத்துமோ என்பதை நினைக்க உடலே நடுங்குகிறது. அவனை விடுதலை செய்ய

ஏதாவது மார்க்கமிருந்தால் அதை முதலில் கண்டுபிடித்து விடுதலை செய்துவிடுங்கள். எனக்கென்னவோ பயமாயிருக்கிறது" என்று ஏதேதோ சொல்லி முடிப்பதற்குள் ஜெமீந்தாருக்குக் கோபம் உச்சத்தை எட்டியது.

"புத்திகெட்ட ஜனங்கள் விவகாரம், நியாயம், கண்ணியம் ஒன்றும் தெரியாத மூட ஜனங்கள் உளறிவிட்டால் உனக்கு ஒட்டிக் கொண்டுவிட்டதோ! சீச்சீ! மானங்கெட்டவளே! உனக்குக் கூடவா இப்படி மூளை கலங்கிவிட்டது? நர்மதைக்குப் பிடித்த பிசாசு உன்னையும் பிடித்து ஆட்டுகிறதா! இந்தப் பருப்பு இங்கு வேகாது தெரியுமா! நீ ஓர் தெருக்கூத்தாடியல்ல. ஜமீந்தாரிணி. பத்திரம். உள்ளே போ!" என்று அதட்டி அவள் கையைப்பிடித்து இழுத்துத் தள்ளினார்.

ஜெமீந்தாரிணியின் மனம் கட்டுமீறிய ஆத்திரத்துடன் பதைத்தது. இதுகாறுமிருந்ததற்கு நேர் விரோதமாகப் பேசத் தொடங்கி, "இனி அந்த பருப்பு இங்கு வேகாதென்று மிரட்டுவதற்கு நான் சின்ன குழந்தையல்ல. பத்து குழந்தைகளுக்குத் தாயானவள் என்பது ஞாபகமிருக்கட்டும். இதுவரையில் கண் தெரியாத குருடியாய், முட்டாளாய், பரம பாதகத்தைச் செய்வதற்குத் துணையாக விருந்தது பற்றி என்மனம் என்னைக் குத்தி எரிக்கின்றது. என் இதயத்தில் ஏதோ ஒன்று என்னைச் சாபமிட்டுக் கொல்கிறது.

நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அந்த நிரபராதியை விடுதலைசெய்யும் மார்க்கத்தைப் பாருங்கள். புத்திவந்த பிறகு புத்திஇல்லாதவர்களைப்போல் நடப்பது சரியல்ல. நாம் செய்த அந்த சதிதான் நர்மதையின் தலையில் வாழாவெட்டி என்கிற பாறையைப் புரட்டியது. அம்ருதவல்லிக்கும் இருமல் நோய் கண்டிருக்கிறது. அவளும் நம் தலையில் கல்லைப் போடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கெஞ்சினாள்.

ஆனால் இதனுடைய பலன் என்னவாயிற்று என்றால் ஜெமீந்தாரிணி, நர்மதை உள்பட எல்லோரையும் தமது ஜமீன் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பட்டிக்காட்டில்கொண்டு தள்ளிவிட்டுத் தான் மட்டும் அதே ஊரில் அட்டகாஸமாய் வாழவாரம்பித்தார். கூண்டிலடைபட்ட பட்சிகளைப்போல் ஊரில் அகப்பட்டுக்கொண்டபின் என்ன தான் செய்யமுடியும்?

சேறுக்கெல்லாம் ஒழிந்து சிறகு ஒடிபட்டப் பறவைகளைப்போ

லானுர்கள். மன நிம்மதி யழிந்தது. பகவானைத் துதித்துவேண்டு வதைவிட வேறென்ன செய்யமுடியும் ? இதயமோ துடிக்கின்றது. சதா "அஞ்சாதே நெஞ்சமே !" என்ற பாட்டு வாயில் ஒலித்தது.

## 34

மன நிம்மதி ஒழிந்தது. பகவானைத் துதித்து வேண்டுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? இதயமோ துடிக்கிறது. சதா "அஞ்சாதே நெஞ்சமே !" என்ற பாட்டு வாயில் ஒலித்தது. எத்தனைதான் ஆதி சரிதைகளை மறக்க எண்ணியும் அவள் நெஞ்சு பசையற்றுப் போகமுடியாது, துடித்தாள். "மகாபாபாத்மாவாகிய நான் ஏன் இந்த உலகில் பிறக்கவேண்டும் ? என்னாலல்லவா அந்த மகானின் மனம் முறிந்து விரக்திப் பதுமைபோலாகி இத்தனை கஷ்டங்களையும் அனுபவிக்கின்றது. பீகம் ! இந்த பாதகத்திற்குப் பகவான் என்னை மன்னிப்பாரா ? என்று சதா புலம்புவாள்.

விலாஸினியின் பரிசுத்தத்தை அறிந்த மும்தாஜ் பீகம் பலவிதமான தேறுதல்கள் கூறியும் வேதாந்த விஷயங்களைப்பற்றி அடிக்கடி பேசியும் பொழுதைப் போக்கி வந்தாள். விலாஸினியின் தகப்பனுர் தமது அந்தியகாலத்திலாவது தம் மகளுடன் சந்தோஷமாக வாழ்க்கைநடத்தலாமென்று எண்ணி எதிர்பார்த்ததற்கு, மகளுடன் இருக்கும் பாக்கியம் ஒருவாறு கிடைத்ததேயன்றி விலாஸினியின் பரிதாபகரமான வாழ்க்கையின் வருத்தம் அவரைக் கப்பிக்கொண்டது. அவளை வற்புறுத்தி விவாகம் செய்துகொள்ளும்படியாகக் கூறவும் அவர் உள்ளம் துணியவில்லை. விலாஸினியின் தீர வைராக்கியச்சுடரின் ஜோதியை அவர் நன்கறிந்திருப்பதால் அவளை இம்சை செய்வதற்கொப்ப எதுவும் சொல்லக்கூடாதென்றுஇருந்துவிட்டார்.

விலாஸினி எந்த காரணத்தை முன்னிட்டும் மதுசூதனனின் எதிரில் வருவதில்லை என்று திருவேங்கடத்திற்கு வாக்குக் கொடுத்திருப்பதை மறக்காமல் இத்தகைய விபரீதமான ஆபத்திலும் அவள் நேரில் சென்று பார்க்காமல், மதுசூதனன் தப்புவதற்கு ஏதேனும் மார்க்கம் உண்டா என்று சாயபுவின் உதவியால் முயற்சித்தாள்.

பணச்செருக்கும், மிருகபலமும் கொண்டு போராடும் ஜமீந்தாரின் அட்டூழியத்திற்கு முன்பு இப் பேதைப் பெண்ணின் முயற்சி பலிக்குமா! மதுசூதனனின் மூன்று வருட தண்டனையைக் கேட்டதும் விலாஸினியின் உயிரே நீங்கிவிட்டதுபோலாகியது. ஒரு வாரம் அன்னுகாரமின்றிப் புலம்பித் துடித்தாள். எப்படியாவது ப்ரதிக்ஞையைமீறி அவனைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா? என்ற எண்ணமும் உண்டாகியது. உடனே சத்தியத்தின் மகிமையை அறிந்து அவ்வெண்ணத்தைச் சிதைத்தெறிந்தாள்.

பரமபக்தனுன ராமதாஸன் சிறையிலிருக்கவில்லையா? சர்வலோக ரக்ஷகனைப் புத்திரனுக அடையும் நிகரில்லாத பேரின்பம் பெற்ற வாஸுதேவரும், தேவகியும் சிறையிலிருக்கவில்லையா? ஜகன்மாதாவாகிய சீதாபிராட்டி சிறையிலிருக்கவில்லையா! இன்னும் அநேக பக்தசிகாமணிகள் சிறையில் வருந்தவில்லையா! புராதன காலத்திற்குப் போவானேன்? நம் கண்முன்பு கலியுகத்தில் பேசும் தெய்வமாகக் கொண்டாடித் தொழும் தியாகமூர்த்தியான மகாத்மா காந்தியடிகள் எத்தனைதரம் சிறை புகுந்து வழி காட்டவில்லையா? எத்தனை தேசபக்தர்கள் சிறையில் அடைபட்டு வருந்தவில்லை! அப்படிப்போல் இவரும் சிறையிலிருக்கிறுர் என்று தேறுவதைவிட வேறு ஒன்றும் தோன்றவில்லை'' என்று தானே மனம் தேறுவாள்.

எத்தனை சமாதானம் செய்தும் சில தினங்கள்வரையில் மனம் நிலையிடங்கொள்ளாது தவித்தது. வழக்கம்போல் தன் காரியத்தை கவனிப்பதில் ஊக்கத்தைச் செலுத்தவாரம்பித்தாள். ஒரு தினம் பத்திரிகை படிக்கப்பிரித்ததும் முன்புகண்ட அதே மதுசூதனின் படத்துடன் இன்னெரு மனிதனின் படமும் அதிலிருந்ததோடு

**'பக்தியால் உதிர்ந்த கவிமலர்கள்**
**இளம் பக்தரின் வைராக்யம்'**

என்ற தலையங்கத்தைப் பார்த்ததும் அவளை யறியாத ஒரு உணர்ச்சியால் தேகம் சிலிர்த்து மயிர்க்கூச்செறிந்தது.

அதற்குமேல் அவளால் படிக்கமுடியவில்லை. "பீகம்! இந்தாருங்கள்'' என்று அவள் கையில் பத்திரிகையைக் கொடுத்தாள். மும்தாஜ் பீகமும் விலாஸினியின் குறிப்பை யறிந்து அதைப் படிக்கத் தொடங்கினுள்.

"அறிவிற்சிறந்த சகோதர சகோதரிகளே!

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நான், இம் மாதிரி ஒரு நிலைமை யடைந்து பத்திரிகையில் எழுதும் சக்தி பெற்று ஒரு மனிதனாய் உலாவப்போகிறேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. என்னுடைய மாறுதலை—என் புனர்ஜென்மம் என்று கூடச் சொல்லலாம்—அதைக் காண எனக்கே நம்பமுடியவில்லை.

பத்து வருடங்களுக்கு முன்பு நான் ஒரு திருடன் ஆமாம். பக்காத்திருடன். அந்த தொழிலில் எனக்கிருந்த உத்ஸாகமும், மகிழ்ச்சியும் கூறத்திறமில்லை. அந்த தொழில்தான் உலகத்தில் அபரிமிதமான ஆனந்தத்தையும், மோக்ஷத்தையும், செல்வம் பதவியையும் கொடுக்கும் உயர்ந்த தொழில் என்று உள்ளம் பூரித்து இறுமாப்புடனிருந்தேன்.

இரவு காலத்தைக் கண்டவுடனே, இறைவனின் திருமுகத்தைக் காணும் பக்தர்கள் அடையும் பேரின்பத்தை விட நான் அதிகம் இன்பமடைவேன். அம்மாதிரி நான் திருடிச் சேர்த்த சொத்து கொஞ்சமல்ல. ஆனால் தம்பிடி காசுகூட நிற்கவில்லை. நானே தேவேந்திரன் என்று கூட எண்ணி மகிழ்ந்ததுண்டு. பல நாளைய திருடன் ஒரு நாளில் அகப்படுவான் என்கிற பழமொழியைக்கூட மறந்துவிட்டேன்.

சுமார் 8 வருஷ காலமாய் கொட்ட மடித்துக் கொள்ளையிட்டுக்கொண்டிருந்த நானும் பிடிபட்டு, என்னுடைய தொழிலில் ஈடுபட்டு பகுமானம் பெற்றுள்ள நண்பர்களுடன் போய்ச் சேர்ந்தேன். அங்கும் எங்கள் திருட்டுப் புத்தி போகவில்லை. வெளியில் வந்தவுடனே எப்படிக் கொள்ளையிடலாம், மோசம் செய்யலாம், அகப்படாமல் தப்பலாம் என்றெல்லாம் யோசனை செய்து அதற்கான ப்ளானும் போட்டுவைத்தோம். ஆனால் நாங்கள் கடவுளிடம் கர்மிகளாய், அஞ்சா நெஞ்சம் படைத்த பஞ்சமா பாதகர்களாயிருப்பினும், குழந்தை எத்தனை கொடியதாயிருப்பினும் தாய் அதையணைப்பதுபோல் பகவான் எங்களை அணைத்து ரக்ஷிக்க ஓர் வழியைக்

காட்ட, தியாகபுத்தியும், ஒழுக்கமும் சுடர்விட்டெரியும் படியான உபதேச கர்த்தாவையனுப்பினுர்.

அவர்தான் பால சன்யாசி என்றும், பக்த சிகாமணி என்றும் கொண்டாடப்படும் மதுசூதனன் இதோ படத்திலிருக்கிருரே இந்த மகானுபாவன். இவர் அகாரணமாய் ஜெமீந்தாரின் செறுக்கால் கைதியாகி சிறையில் வந்ததானது, இருளடைந்து கிடந்த எங்கள் அகக்கண்களைத் திறந்துவைக்கும் ஜோதியா யமைந்தது.

அந்த உத்தமர் சிறைக்கு வந்து சில மாதங்களே ஆயிற்று; எனினும் சிறையின் அதிகாரிகள் முதல் அவருடைய புனிதத்தன்மைக்கு வியப்புற்று அவரை ஒரு கைதியாக நினைக்காமல் பக்தராகவே நினைத்து வருகிருர்கள். சிறையில் அவர் வாயிலிருந்து உதிரும் பிரஸங்கங்களும், கவிகளும் எங்களுடைய அந்தகாரத்தை மாற்றி ப்ரகாசமளித்து எங்கள் இதயங்களைபரிசுத்தமாக்கி இதயத்தை சந்தோஷமலர்போல் விகசிதமுறச் செய்தது.

என்போன்ற பல திருடர்களும், இதர கொலைகாரர்களுங்கூட அவருடைய கவிகளினுலும் உபதேசத்தினுலும் நன்கு சீர்பட்டுத் தம் குற்றத்தை யறிந்து பகவானிடம் மன்னிப்புப் பெற்று வேண்டவும் ஒழுக்கத்துடன் பக்தி செய்யவும் முற்பட்டுவிட்டார்கள் என்ருல் அப் புண்யமூர்த்தியின் கீர்த்தியை என்னென்று சொல்வது? எங்களுடைய திருட்டுப் பிளான்களெல்லாம் கடலில் கரைந்தன. அம்மகான் விடுதலையானதும் அவருடைய பஜனை கோஷ்டியில் சிஷ்யராகவிருந்து எங்கள் காலத்தைக் கழிப்பது என்கிற பரிபக்குவத்திற்கு எங்கள் மனம் திரும்பிவிட்டது.

அந்த மகானின் தரிசனம் எங்களுக்கு தேவதரிசனமாகவே தோன்றுகிறது. அவருடைய "அஞ்சாதே நெஞ்சமே "கர்வங்கோள்ளாதே நெஞ்சமே" சோதனையோ ராமா! "வீணுசை கோண்டலையாதே" "ஆண்டவனிடத்தில் உன் ஆணவம் பலியாது" "பரமனடியை என்றும் மறவாதே" முதலிய அமிருதம்போன்ற பாடல்கள்தான் எங்களுக்கு உபதேசரத்னமாலையைப் போன்றும், ஒப்பிலா மாணிக்

கம்போன்றும், வாழ்க்கையின் சுடர் விளக்குபோன்றும் அமைந்துள்ளன. சிறைச்சாலைக்குள் ஓர் புதிய ஜோதி உதயமாகியதுபோலும் புதிய சக்தியும் தேஜஸூம் தோன்றியதுபோலும் ஆகிவிட்டது.

ஜெயிலருடைய அனுமதி பெற்று அவருடைய பாடல்களில் சிலவற்றை நான் விடுதலையாகும்போது கொண்டு வந்திருக்கிறேன். அவற்றைப் பிரசுரம் செய்ய உத்தேசம். பக்தர்களெல்லாம் அதற்கான பேருதவி செய்யவேண்டும். சில மாதங்களுக்கு முன் வரையில் நான் பெரிய திருடன்தான். ஆனால் இன்று நானும் ஒரு மனிதப் பிறவிதான் என்ற தைரியத்துடன் மனித வர்க்கத்தில் சேர்ந்துள்ளவனாகவிருக்கிறேன்.

அந்த மகானுபாவனை செல்வச் செறுக்கு படைத்த ஜமீந்தார் சிறைக்கு அனுப்பியதுதம் வஞ்சத்தைத்தீர்த்துக் கொள்வதற்காகயிருப்பினும், சிறைச்சாலையையே ஓர் அறச்சாலையாய் மாற்றிச் சீர்திருத்தம் செய்து மக்களை உய்யும் வழிகாட்டும் பிரசாரகர்த்தாவாகவே அனுப்பிய பேருபகாரமாயிற்று. என்னைப்போன்ற அயோக்யர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் நல்ல யோக்யர்களாகி தாமும் ஒழுக்கத்துடன்வாழவேண்டும் என்ற முறையை அறிந்து கொண்டார்கள். அந்த புனிதமூர்த்தியைப் பகவான் ரக்ஷிப்பாராக. அவரது கவியைச் சிறப்புற ஓங்கச் செய்வதற்கு உதவி புரியும் தர்மவான்கள் அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதியோ, நேரிலோ தெரிவிக்கவும்.

இங்ஙனம்

குமாரஸாமி,

சண்முக விலாஸ், காவிரிநகர்.

என்றதைப் படிக்கக் கேட்ட விலாஸினியின் உள்ளத்தில் கூறத்திற மற்ற சந்தோஷமும் இன்பமும், நூதன உணர்ச்சியும் வெள்ளம் போல் பொங்கின. ஒருவிதமான ஆவேசத்துடன் மும்தாஜ்பீகத்தையும் தன் பிதாவையும் பார்த்தாள்.

அந்த பார்வையில் பொதிந்து கிடக்கும் கருத்தை ஒரு நொடியிலறிந்த பீகம், "விலாஸினி! உன்னிஷ்டப்படியே செய்ய ஒரு விதமான ஆக்ஷேபணையும் இல்லை. அந்த மனிதனுக்குக் கடிதமெழுதி

இங்கேயே நான் வரவழைக்கிறேன். உன்னுடைய ஞாபகார்த்த மாக உன் செலவிலேயே அந்த காரியத்தைச் செய்து திருப்தி யடையலாம். தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று விலாஸினி யின் தகப்பனுரைக் கேட்டாள்.

அவருடைய கண்கள் பலபலவென்று நீரைக் கக்கின. வாய்த் திறந்து பேசமாட்டாது தமது சம்மதத்தைத் தலையசைப்பினுல் தெரி வித்தார். எல்லோரிடத்திலும் மௌனம் குடிகொண்டது. பின்னும் நான்கு தினங்கள் சென்றன.

மும்தாஜ் பீகத்தின் கடிதத்தைக் கண்டதும் குமாரஸாமி அங்கு வந்து சேர்ந்தான். புகைப்படத்திலிருப்பவனும் அவனும் ஒரே ஆள் என்பதை அறிந்த பீகம் அவனை வரவேற்று உட்காரச் செய்தாள். அவன் ஒரு பக்காத்திருடன் என்று நினைக்கும்போது ஒரு நிமிஷம் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சற்று அச்சமாயுமிருந்தது. அவனை எல்லோரும் உற்றுப் பார்த்தார்கள்.

அந்த மனிதனுக்கும் அவமானத்தினுல் தேகம் குன்றி தலைகுனிந் தது. உடனே சமாளித்துக்கொண்டு, "தாயே! தாங்கள் நினைக்கிற படி நான் இனி அயோக்யனல்ல. உங்கள் அல்லாமீது ஆணையாக, நான் அந்த புனிதஸ்வரூபனுல் முற்றிலும் திருந்திவிட்டேன். என்னைத் தாங்கள் பரிபூர்ணமாய் நம்பலாம்'' என்று கூறும்போது விசனத்தினுல் கண்ணீர் உதிர்ந்துவிட்டது.

பிறகு விலாஸினியின் தகப்பனுர் உள்பட மூவரும் பேசி முடித்ததில் அந்த புத்தகத்தைத் தாமே முற்றிலும் அச்சியற்றித் தருவதாயும் அந்த பணத்தை மதுசூதனனின் தத்தளிக்கும் குடும் பத்திற்குச் செலவுக்குக் கொடுப்பது என்றும் தீர்மானித்தார்கள். அதற்கந்த மனிதனும் பரம திருப்தியுடன் ஒப்புக்கொண்டு பாடல் களை—மதுசூதனனின் கையெழுத்தில் எழுதியுள்ள நோட்டு புத்த கத்தை—விலாஸினியிடம் கொடுத்தான்.

விலாஸினிக்கு வெறும் நோட்டுப் புத்தகமாகத் தோன்ருமல் மதுசூதனனையே நேரில் காண்பதுபோன்ற உணர்ச்சிதோன்றியது. அம்மனிதனுக்கு விலாஸினியைப்பற்றி எந்த விவரமும் அறிவிக்க வில்லை.

விலா:—ஐயா! அவர் உடம்பு ஒன்றுமில்லா திருக்கிருரா! என்று தன்னை மீறிப் பொங்கிவரும் பிரேமை வெள்ளத்துடன் கேட்டாள்.

குமா :—அம்மணீ ! புண்ணிய புருஷனுக்கு ஒரு குறைவுமில்லே. உடம்பு பளபளவென்ற மேனியுடன் வெகு தேஜஸாய் பிரகாசிக்கிறுர்.

விலா:—அவரும் கைதிகள் உடையில்தானிருக்கிறுரா ? கைதிகளைப்போல் வேலே செய்கிறுரா ! அவருக்கும் களியுங் கூழுந்தான் ஆகாரமா ?—என்று கேட்கும்போது நெஞ்சை துக்கம் அழுத்தியது ; குரல் கம்மியது. கண்ணீர் மளமளவென்று வந்துவிட்டது.

குமா:—அம்மணீ ! எல்லாவிதமான ஜெயில் ரூலும் அவருக்கும் உண்டு. ஆனுல் வார்டர்கள் அவருடைய பக்தியிலீடுபட்டுவிட்டதால் அவருக்கு அதிக வேலே கொடுக்காது அவருடைய வேலேகளை மற்ற கைதிகளேக் கொண்டு வாங்கிவிடுகிருர்கள். அதோடு அவருடைய உபதேசம் பெற்ற கைதிகள் அவரிடம் தாஸானுதாஸனுய் காத்திருக்கிருர்கள். வேலே செய்யும்போதும் உபதேசந்தான். இரவில் சுமார் 30 பேர்களுக்குமேல் ஒரு கொட்டடியில் போட்டு விடுவார்கள். நித்திரைக்கு முன்பு பஜனே, நல்ல கதைகள் சொல்வது இதேபோல் ஆனந்தமாய்க் காலம் கழித்து வருகிருர். அவருக்கும் களியுங் கூழுந்தான் ஆகாரம். சில நாள் வார்டர்களே பழம், பலகாரம் முதலியன தெரியாது வாங்கிவந்து கொடுப்பார்கள்.

விலா:—அவர் சொந்த விஷயமாய் ஏதாவது பேசுவதுண்டா !

குமா :—ஒன்றுமே பேசியதில்லே. ஆனுல் எப்போதேனும் ஒரு சமயம், "எனக்கித்தனே வைராக்கியமும், பக்தியும், திடசித்தமும் உண்டாகும்படி உபதேசித்தது ஓர் பெண் தேவதை. விலாஸினி என்று அந்த தேவதைக்குப் பெயர். அந்த தேவதையினுல்தான் நான் இந்த பதவியை அடைகிறேன். பேரின்பத்தைக் காண்கிறேன். ஈச்வர கிருபைக்குப் பாத்திரனுகிறேன். அகண்டாகாரனுன ஆதிமூர்த்தியைத் தரிசித்து இன்பமடைய பிரார்த்திக்கின்றேன்" என்று மட்டும் கூறுவார். மற்றபடி ஒன்றுமே சொல்லியதில்லே.

இந்த வார்த்தையைக் கேட்ட எல்லோருக்கும் கண்ணீர் உதிர்ந்துவிட்டது. அதற்குமேல் பேசவே முடியாது துக்கம் அபாரமாய்ப் பொங்கியதால் விலாஸினி அந்த நோட்டு புத்தகத்துடன் உள்ளே போய்விட்டாள். இன்னும் சில தினங்கள் சென்று வந்து காணும்படி மும்தாஜ் பீகம் குமாரஸாமியை அனுப்பினுள்.

உள்ளே சென்ற விலாஸினி தன்னே மீறிய சோகத்துடன் தன்னந்தனியே தேம்பித் தேம்பி அழுதாள். "தேவதையா ! நானு

தேவதை! நான் அவருடைய வாழ்வையே பாழ்படுத்திய சத்ரு வல்லவா! என்னையா தேவதை என்று சொல்லத்தகும்? இல்லை, இல்லை....ஒருபோதும் இல்லை. நான் அவருக்கு அனுகூலியே இல்லை மகா பாதகி, துரோகி, சண்டாளி" என்று தன்னையே தான் நொந்துகொண்டாள். வெகு நேரம் புலம்பிப் புலம்பி மனத்தில் கொந்தளிக்கும் மனப்புயலை சற்று வெளியேற்றி ஒரு சிறிது சமாதானமடைந்தாள். பிறகு நோட்டுபுத்தகத்தைப்பிரித்தாள். அதில் முதல் பக்கத்திலேயே,

ராகம் பரஜு : தாளம் - ஆதி.

நாரணியே! ஜகத்காரணியே! பரிபூரணியே!
பாவ நிவாரணியே! (நா)
காருண்யக் கடலும் வற்றியதோ? நெஞ்சம்
ஆரண்யமோ! கல்லோ! அசையாப் பெருங்குன்றோ
தயவில்லையா! காக்க மனமில்லையா!
தாய் வெறுத்திடில் என்னை நாயும் வெறுக்குமன்றோ!
அடிமையை ஆண்டருள்வாய் ஜகன்மாதா!
கடிந்திடில் புகலுண்டோ! (நா)

என்ற பாடல் காணப்பட்டது. அதைப் பலமுறை படித்து இன்பக் கண்ணீரும் துன்பக் கண்ணீரும் உதிர்த்தாள். மற்ற பாடல்களையும் படித்து அன்று பூராவும் அந்த கவியமுதிலேயே தன் காலத்தை இன்பமாய்க் கழித்தாள். உள்ளத்தில் கூறத்திறமற்ற சந்தோஷம் பொங்கியது. தனக்கொரு பெரும் புதையல்கிடைத்துவிட்டதாகவே எண்ணி இதயம் அமிருதமயமாய் தேங்கியது.

## கானல் நீர்

கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை!
கருத் திலறிவ தில்லையே
நாடுவ தொன்றும் நடப்பது ஒன்றும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே!

என்ற தத்துவத்தைச் சித்திரித்துக் காட்டும் கதை. இந்தக் கபட உலகத்தில் வெறிபிடித்த மோகம் என்னென்ன செய்யும் என்பதையும், தன்வினை தன்னைச் சுடும் என்பதையும் விவரிக்கும் நாவல்.

விலை ரூ. 1-4. சந்தாநேயர்களுக்கு ரூ. 1.

# 35

உள்ளத்தில் கூறத்திறமற்ற சந்தோஷம் பொங்கியது. தனக்கொரு புதையல் கிடைத்துவிட்டதாகவே எண்ணி இதயம் அமிருதமயமாய் தேங்கியது. நர்மதா, கவியின் "சந்தோஷமலர்" என்கிற புத்தகத்திலுள்ள அரிய பொக்கிஷம் போன்ற பாடல்களைப் படித்தாள். ஜெமீந்தாரிணி ஆனந்தமாகக் கேட்டபடியே கண்ணீர் விட்டு மேற்படி ஆனந்தத்தை அனுபவித்தாள்.

சிறையிலடைப்பதுபோல் இவ்விருவரையும் கிராமத்தில் கொண்டு அடைத்துவிட்டதாலும், ஜெமீந்தாரிணியின் மனம் முற்றிலும் மாறிப்போய் தான் செய்த பெரும் பாதகத்திற்காக வருந்தி இரவு பகல் வேதனைப்பட்டதாலும் நோயாளியாய்விட்டாள். படுக்கையுடன் படுக்கையாய்க் கிடக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

நர்மதாவும், அவள் தாயாரும் இந்த தனிவாஸத்தின் பயனால் பழய படாடோபமும், நாகரீகமும் அடியோடு நீக்கி சாதாரண கர்நாடகப் பெண்களாக மாறியதோடு தெய்வ பக்தி, பெரியாரியல்பு, அறம் வளர்த்தல், நல்லொழுக்கம் முதலிய விஷயங்களை திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், தேவாரம் முதலிய பல நூல்களைப் படித்து அறிந்துகொண்டு கூடுமான வரையில் அப்படியே நடந்து வந்தார்கள்.

நர்மதைக்கு மட்டும், தான் எப்படியாவது தன் கணவனிடம் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்கிற அவா தினேதினே விருத்தியாகிக்கொண்டு வந்தது. அந்த வேட்கையைத் தன் தாயாருடன் தெரிவித்து எப்படியாவது தன்னை அனுப்பிவிடும்படியாய்க் கேட்டாள். தாயாருக்கும் அது மிக்க உசிதமாகப் பட்டதாகையால் "நர்மதா! உன் கணவனுக்கு நீ ஒரு கடிதமெழுது. அதற்குப் பதில் என்ன வருகிறதோ! பார்க்கலாம்" என்று உத்திரவு கொடுத்தாள். அதற்கே எதிர்நோக்கிக்கொண்டிருந்த நர்மதையின் மனம் பூரித்தது. உடனே வெகு உருக்கமாயும், வணக்கமாயும் கணவனுக்குக் கடிதமெழுதத் தொடங்கினாள்.

"பிரேமை மிக்க பிராணகாந்தரின் திருவடித்தாமரைகளில் அடிமையும், அபாக்யவதியுமான [illegible] அனந்தங்கோடி வந்தனங்கள். தங்கள் க்ஷேமசமாசாரத்தைச்சதாகோரி எதிர்பார்க்கிறேன். கடவுள் என் மனத்தில் முதலில்



183048

ஆசையை எழுப்பியபோது நான் இம்மாதிரி ஓர் துர்ப் பாக்ய நிலையை அடைவேனென்று சற்றும் நினைக்க வில்லை. கற்பக விருக்ஷம்போன்ற தங்களைச் சுற்றி நிற் கும் கொடியாகவே என் வாழ்நாள் முற்றிலும் இன்ப மாய்க் கழிப்பேன் என்று மனப்பால் குடித்தேன்.

எனக்கே உபாத்தியாயினியாயிருந்து உபதேசம் செய்த வாத்தியாரம்மாளே, என் குருவே எனக்குப் பரம சத்ருவாயமைந்தது எனது துர்ப்பாக்யமேயன்றி வேறில்லை. தங்களின் சஹதர்ம பத்தினியாயிருந்து மகிழ்ச் சியடையும் பாக்யம் இல்லையெனினும் தாங்களும் தங்கள் காதலியும் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்து இன்புறும் பாக்யமாவது எனக்குக் கிடைக்கும்படிச் செய்தால் நான் பரமதிருப்தியடைவேன். என் ஜன்மமே சார்த்தகமாகி பேரின்பவாரிதியில் மிதப்பேன்.

நான் ஏன் ஒரு உயர்குலத்து ஜெமீந்தாரிணியாய் பிறந்தேன் என்று பலகாலும் விசனிக்கின்றேன். பணச் செறுக்கும், பதவித் திமிரும் மனிதரின் வாழ்வை பாழ் படுத்தியதேயன்றி ஓர் சாதாரண ஏழை அடையும் நித் தியமான ஆனந்தத்தை நான்சொப்பனத்திலும் காணவே இல்லை. தங்களையும் தங்கள் ஆசை மனைவியையும் பல முறை கெஞ்சி வேண்டிக்கொள்கிறேன். என்னை உங் கள் வேலைக்காரியாய், சமையல்காரியாய், வாசல்காக் கும் நாயிக்குப்போடும் அன்னத்தைப்போல் ஒரு கவளம் போட்டு, நாயை வைக்கும் ஸ்தானத்திலாவது எனக்கு ஒரு சிறிது இடங் கொடுத்தால்போதும். நான் உங்களிரு வருடைய இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக ஒருபோ தும் இருக்கமாட்டேன். என்னுடைய இக்கோரிக்கைக் குச் செவி கொடுத்து மனமிரங்கிக் கீழ்க்காணும் விலா ஸத்திற்குப் பதில் எழுதவேண்டுகிறேன்.

தங்களுக்கு அக்கினி சாக்ஷியாய்
மாலையிட்ட அபாக்கியவதி
நர்மதா."

அன்று எழுதி தபாலுக்கனுப்பிவிட்டாள். தன் இதயத்தை அழுத்தி வருத்திக்கொண்டிருந்த ஓர் பெரும் பாறையைச் சற்று


Samuel

# கருணாலயம்

கருணாமூர்த்தியாகிய பரந்தாமன் எழுந்தருளியிருக்கும் இடத்தை மாத்திரம் ஆலயம் என்று நாம் நினைக்கிறோம். அது மாத்திரமல்ல. ஆறறிவு படைத்த மக்களின் பரிசுத்தமான இதயம் கருணாலயமாய், பச்சாத்தாப நிலையமாய், பரோபகாரக் குன்றமாய் விளங்கும்படி பகவான் நியமித்திருக்கும் சூக்ஷ்ம தத்துவத்தை ஒவ்வொருவரும் நன்கறிந்துகொள்ளவேண்டும். நமது இதயம் வெறும் ரத்த மாம்ஸாதிகளை நிரப்பிய பையல்ல. மானிடத் தத்துவத்தின் ஜீவநாடியைத் தன்னுள்ளே பெற்றுள்ள ஓர் உயர்ந்த கருணாலயமாய் அந்த பரிசுத்த இதயத்தை உபயோகப்படுத்தவேண்டும். ஒவ்வொருவருடைய தூய இதயத்திலும் அந்தப் பரந்தாமன் வீற்றிருக்கிறான். அவன் துணை கோண்டு இதயத்தில் அன்பு ததும்ப பரோபகாரம் செய்வதும், ஜீவஹிம்சையைத் தடுப்பதும், கூடுமானவரையில் தியாகத்திற்குத் தயாராகவிருப்பதும், சமூகத்திற்கு எக்காலத்திலும் உழைப்பதுமே மனித தர்மமும் தத்துவமும் என்பதை வயதில் சிறியவனாகவிருப்பினும் ரமணி நன்குணர்ந்து அதன்படியே நடக்கிறான். அவனுடைய இதயம் வெறும் மனித இதயமாக இல்லாது உயர்ந்த கருணாலயமாய் எல்லோரும் வியக்கத்தக்க முறையில் அமைகிறது. ரமணியின் அரிய சேவைகள் அநேகம் நிறைந்திருப்பதை

"*கருணாலய*"த்தில்

கண்டு களியுங்கள்.

டிசம்பர் முடிவுக்குள்
**8** அணா அனுப்புவோருக்கு
தபாற்செலவு இனாம்.

# சந்தோஷ மலர்

மதுசூதனன் ஒரு பரமபக்தன். சங்கீதக் களஞ்சியம். செல்வமும் ஆடம்பரமும் அவனுக்கு த்ருணம்; அதனால் ஜமீந்தாரும் அவன் விரோதியாகிறான். அவனுக்குப் பக்திமார்க்கமே பேரின்ப நிலையாகவும் வாழ்க்கையின் லக்ஷியமாகவும் அமைந்தது. மாசுற்றவர்களையும் மாசற்றவர்களாக மாற்றும்விதத்தில் தன் சங்கீதத்தை உபயோகப்படுத்துகிறான். அவன் சங்கீதத்தின் திறமையும், பக்தியின் பெருமையும் இவ்வுலகத்தையே பிரமிக்கச் செய்கின்றன. அவன் கண்களுக்கு இவ்வுலகமே ஒரு சந்தோஷ மலராகப் புலப்படுகிறது. இந்த காயகனின் களிப்பில் நீங்களும் கலந்துகொள்ளுங்கள்.

**வை. மு. கோதைநாயகி அம்மாள்**

எழுதிய

**52-வது நாவல்**

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] [ரூ. 1/8.

சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை.

*Fifty Second 'JMO' Publication*

ALL RIGHTS BELONG TO THE AUTHORESS.

" ஜகன்மோகினி " பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

நேரம் இறக்கி வைத்தது போன்ற ஒரு தோற்றமும் சந்தோஷமும், என்ன கடிதம் வருமோ என்ற எதிர்பார்ப்பும் உண்டாயின. அடுத்த நிமிடமே, 'ஒன்றுமே வராவிட்டால்?'...என்று நினைக்கும்போது தேகமே நடுங்கியது. "உம். எதுவாயினும் பயப்பட்டு நம்மால் தடுக்க முடியுமா! அனுபவித்துத்தானே தீரவேண்டும்.

ராகம் - மணிரங் : தாளம் - ஆதி.

பல்லவி

உன்னாலாவது உண்டோ! உலகில்
உணர்ந்திடுவாய் மனமே! (உ)

அநுபல்லவி

அன்னாள் அமலன் ஆக்கிய விதியினை
இன்னாள் மாற்றிடல் ஏலுமோ மனமே! (உ)

சரணம்

ஆவதும் அழிவதும் அவனருளன்றோ!
தாவரம்முதல் பக்ஷி ஜீவன்கள் பலவும்
நோவதினால் இன்பம் நுகர்ந்திடல் போமோ!
தேவதேவன் பாதத்தியானமே செய்திடு. (உ)

என்று பாடியுள்ள மதுசூதனனின் கவியைப் பாடி மனம் தேறினாள். ஒரு வாரம் சென்றபிறகு ஒரு கடிதம் கிடைத்தது.

"பிரிய நர்மதா!

நான் உன் வாழ்வைக் கெடுக்கும் பங்காளியாக அமைந்தது பற்றி மிக்க வருத்தமுறுகிறேன். அவரை நான் ரிஜிஸ்தர் மணம் செய்துகொண்டபோது நீதான் அவருடைய மனைவி என்பது எனக்குத் தெரியவே தெரியாது. அப்படித் தெரிந்திருக்குமாயின் நான் உனக்குச் சத்ருவாய் ஒருபோதும் அமைந்திருக்கவேமாட்டேன். நர்மதா! அன்று உன்னை ரயில்வே ஸ்டேஷனில் பார்த்தது முதல் என் வாழ்க்கையிலும் இடி விழுந்ததுபோலாயிற்று.

நான் ஒரு உபாத்தியாயினியாயிருந்து மேல்நாட்டுப் படிப்புக்குச் சென்று உயர்ந்த காரியங்களைச் செய்து உத்தமி என்கிற பெயரை வாங்காது, என்னறிவு முற்றும் மழுங்கி நாகரீகப் பேய்பிடித்தாட்டி என்னையும் பாழாக்கி உலகின் வசையைத்தாங்கும் சுமைதாங்கியாகிவிட்டேன்.

நர்மதா! உண்மையில் நான் கூறுவேன். அவர் தனக்கு

விவாகமே ஆகவில்லை என்றும் என்னை மனப்பூர்வமாக நேசிப்பதாயும் பசப்பிய பசப்புமொழியில் நானும் மதி யிழந்து எல்லை மீறிய நேசங் கொண்டுவிட்டேன். அதை மாற்றமுடியாது சாக்ஷிபோல் குழந்தையையும் பகவான் கொடுத்துவிட்டார். நவ நாகரீகப்போக்கின் பலன் இது.

அன்று முதல் நான் அவரிடம் உன்னை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தும்படியாக பலமுறை வற் புறுத்தினேன். உன்னை நானே பாழ்படுத்திவிட்டு உன்னை என்னுடன் ஜோடி வாழ்க்கை நடத்த அழைப்பது நீதி யல்லவென்று எனக்குத் தோன்றியதால் நான் இதுவரை யில் மவுனம் சாதித்தேன். அவர் நான் சொல்லியதைக் கேட்கவே இல்லை. இப்போது உன் கடிதத்தை முதலில் நான்தான் பார்த்தேன். பிறகுதான் அவர் பார்த்தார்.

நர்மதா! ரயில்வே ஸ்டேஷனில் பார்த்த பிறகு, அன்றுமுதல் இன்று வரையில் நாங்கள் மன ஒற்றுமை யற்றவர்களாய் வாழ்க்கை நடத்தி வருகிறோம். என் மனமே சரியாயில்லை. நான் உன் துயரம் எத்தகையது என்பதை அறிவேன். என் தாயாருக்குப் பாரிசவாயுவு வந்து தேக ஸ்வாதீன மற்றுப் படுக்கையாய் விழுந்து விட்டாளாம். அவளிடம் நான் போகிறேன். என் உத் யோகம் என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றும். நான் உங்கள் வாழ்க்கை விளக்கை ஏற்றிவைக்கவே இரவு பகல் பிரார்த்தனை செய்கிறேன். நான் ஊருக்குப்போகும் முன்பே நீ வந்தால் உன்னைக் கண்ணால் பார்த்துவிட்டு உன்னிடம் நேரில் மன்னிப்பும் பெற்றுக்கொண்டு நான் போய்விடுகிறேன். இனி என்னிடம் நம்பிக்கைக் குறைவு வேண்டாம். நீ உடனேவரவும்; பயப்படவேவேண்டாம்.

உன் வரவை எதிர்பார்க்கும்,

நாகவேணி.''

இதைத்தானும் பன்முறை படித்தாள்; தாயாருக்கும் படித்துக் காட்டினாள். நர்மதையின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங் கியது. தன்மீது இத்தனை கருணையுடன் அந்தம்மாள் எழுதியிருப் பதைக் காண ஜெமீந்தாரிணியம்மாளுக்கும் மனம் பூரித்தது. ''நர்மதா! நம்மை என்னவோ உன் தந்தை ஓர் மிருகத்தை நடத்து

வதுபோல் நடத்துகிறார். இதுகாறும் நான் அவருடைய நிழல் போலிருந்ததையும் மறந்துவிட்டார். இனிமேல் என் கதி எப்படியாவது ஆகட்டும், உனக்குப் பகவான் விடிவுகாலத்தைக் காட்டியிருக்கிறார். ஆதலால் நாம் இன்றே புறப்படுவோம். பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இரு" என்றாள்.

நர்மதா :—அம்மா! அப்பாவிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போவது சரியாம்மா! இன்று தந்தியடித்து வரவழைத்தால் நல்லதல்லவா!

தாயார் :—குழந்தாய்! அவரிடம் தெரிவித்தால் காரியமே கெட்டுவிடும். தந்தைக்குள்ள சொந்தம் தாயிக்கில்லையா! நீ இருக்க வேண்டிய இடத்தில் ஆனந்தமாயிருந்தால் அதன்பிறகு அவர் ஒன்றும் சொல்லமுடியாது. ஆகையால் நீ எதற்கும் கவலைப் படாமல் கிளம்பு. நானே நேரில் வந்து கொண்டுவிடுகிறேன்.

நர்:—நீ மிகவும் பலஹீனமாய்ப் படுக்கையாயிருக்கிறாயேம்மா! உன்னால் ரயில் பிரயாணம் செய்யமுடியுமா!

ஜமீ:—குழந்தாய்! உன்னுடைய ஆனந்தகரமான வாழ்க்கையைவிட என் பாழாப்போன உடம்பு ஒரு பிரமாதமா! நீ கவலைப் படாதே! கிளம்பு—என்று தைரியங் கூறினாள்.

அன்று வண்டிக்கே தாயும் மகளும் குமாஸ்தாவின் துணையுடன் கிளம்பிவிட்டார்கள். ஜெமீந்தாரிணியின் சந்தோஷம் எல்லையற்றதாயிற்று. ஒரு வாரம் சென்றபிறகு, பரம திருப்தியான முகத்துடன், தெம்பாயும், புதிய சக்தியுடனும் ஜெமீந்தாரிணியம்மாள் திரும்பி வந்தாள்.

அவளைக் கண்டதுமே இளைய புதல்வி ஓடோடி வந்து, "அம்மா! அக்காவை அவள் கணவர் வரவேற்றாரா! அந்தம்மாள் போய்விட்டாளா! அக்காவும் அவள் புருஷனும் எப்படி இருக்கிறார்கள்?" என்று ஆவலே வடிவாய்க் கேட்டாள்.

ஜெமீ :—நர்மதையை நான் பெற்ற பாக்கியத்தை—சந்தோஷத்தை—அன்றே அடைந்தேன். ஸ்டேஷனுக்கே நர்மதையின் கணவரும், இளைய மனைவியும் வந்திருந்தார்கள். அவளை நாகவேணி கட்டியணைத்துக்கொண்ட காக்ஷி என் கண்ணைவிட்டகலவே இல்லை. என்னிடம் வந்து நமஸ்கரித்து, "அம்மணீ! என்னை மன்னிக்கவேண்டும். என்னை அறியாமல் நேர்ந்த இந்த துரோகத்திற்கு பெத்த தாயாகிய நீங்கள் க்ஷமித்துக்காக்கவேண்டும்" என்று என் கைகளைப் பிடித்

துக்கொண்டாள். எனக்கும் பரிதாபமாயிருந்தது. "அம்மா! இதெல்லாம் மனிதர்களால் நிகழும் சோதனையல்ல; ஈசனின் சோதனை. மேலும் எங்கள் ஜெமீன் பரம்பரையில் மூன்று தலைமுறைக்கொருவர் இரு மனைவி வாழ்க்கை நடத்துவது வழக்கமாயிருக்கிறது. அந்த வழக்கம் நர்மதைக்கு வந்தது என்றுதான் அன்றே நான் எண்ணினேன். நீ கவலைப்படாதேம்மா! எல்லாம் விதியின் விளையாட்டு" என்று தேறுதல் கூறினேன்.

அம்ரு:—ஏம்மா! அவள் அத்தனை நல்லவளாம்மா! அக்கா புருஷன் என்ன சொன்னர்?

ஜெமீ:—சொல்வதென்ன விருக்கிறது? அக்காவுடன் அபாரமான மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம். "உன்னை நான் கனவிலும் மறக்கமாட்டேன் நர்மதா! நான் செய்த காரியம் மிகவும் தப்பிதமானது என்பதை நாகவேணியினல் உணர்ந்தபிறகுதான் நான் மனந் தவித்தேன். இனி என்மீது கோபிக்காதே. உன்னிஷ்டத்துக்கு அன்னியதாக நான் நடப்பதே இல்லை. நீ விரும்பினல் நாகவேணி இருக்கட்டும்; இல்லையேன் அனுப்பிவிடுகிறேன்" என்ருராம்.

அதற்கு அக்கா எவ்விதமான பதிலும் சொல்லவில்லையாம். ஆனல் கொஞ்ச நேரங்கழித்து, "உலகமே பெரும்புரட்டானது. ஒரு பெண் இம்மாதிரி ஒரு புருஷனிருக்கையில் இன்னொருவனை மணக்க உரிமையிருக்குமாயின், புருஷர்கள் சும்மா இருப்பார்களா! அவளையும் அந்த புருஷனையும் சேர்த்துக் கொன்றுபோட்டிருப்பார்கள். அந்த சட்டம் ஸ்திரீகளுக்கு இல்லாததனல் யார் வேண்டுமானலும் எது வேண்டுமாயினும் செய்யலாம்.

நிர்த்தோஷமாயுள்ள பெண்ணை பணத்திற்காக ஒதுக்கலாம்—அல்லது அழகில்லை என்று தள்ளலாம்; நோயாளி என்று விலக்கலாம். கர்ப்பவதியாகவில்லை புத்திரசந்தானத்திற்காக இன்னொருத்தியை மணக்கிறேன் என்று மானங்கெட்டுக் கூறி முன்னவளை வாழாவெட்டிபோல் புறக்கணிக்கலாம். எது செய்தாலும் சாஸ்திரமும் சட்டமும் இடங்கொடுப்பதனல் தைரியத்துடன் துணியலாம். ஆனல் அந்த பெண்கள் வயிறெரிந்து இடும் சாபத்தின் ஜ்வாலையை மட்டும் இந்த சட்டமோ, சாஸ்திரமோ ஒன்றும் அசைக்கவேமுடியாது. அதற்கு அகப்பட்டுத்தான் தீரவேண்டும்" என்று கண்ணீர் பெருகக் கூறினளாம்.

அதற்கவள் புருஷர் 'மிகவும் வாஸ்தவம்' என்று ஒப்புக்

கொண்டு வருந்திக் கண்ணீர் விட்டாராம். பிறகு தம்பதிகள் அன்யோன்யமாக விருந்தார்கள். நாகவேணி ப்ரயாணமாகியதை நான்தான் தடுத்து "இருவரும் வள்ளி, தேவயானையைப் போலவும், ஸ்ரீதேவி பூதேவியைப் போலவும் ஒற்றுமையாக இருங்கள். இனி உன்னைத் தள்ளிவிட்டால் மட்டும் அதுவும் பெண்வதையல்லவா! உன் வாழ்க்கையை இனி பாழ்படுத்துவது சற்றும் தர்மமல்ல. இருவரும் தேனும் போலும்போல் இருங்கள்" என்று நானே தீர்ப்புக் கூறி அவளைத்தேற்றினேன். என் கையினாலேயே அவளுக்கு அன்ன மிட்டுத் தலைமுடிந்து, எனது அன்பைக் காட்டி நல்ல வார்த்தைகள் கூறிச் சமாதானம் செய்தேன். 4, 5 நாளைக்குமேல் அங்கிருப்பது சரியல்லவாகையால் நர்மதாவுக்கும் நாகவேணியுடன் ஒற்றுமையாக இருக்கும்படி புத்தி கூறிவிட்டு நான் வந்தேன். ஒற்றுமையாகவே தானிருப்பார்களென்று நம்புகிறேன்" என்றாள்.

பின்னும் ஒருவாரமாயிற்று. நாகவேணியும் நர்மதையும் தங்களுடைய ஒற்றுமையான இல்வாழ்க்கையைப்பற்றிக் கடிதமெழுதினார்கள். அதைப் படித்து ஜெமீந்தாரிணியின் மனம் பூரித்தது. நர்மதாவும், நாகவேணியும் எழுதும் கடிதங்கள் முற்றும் ஜெமீந்தாரிணிக்கு சந்தோஷ மலர்கள்போல் தோன்றின.

சில மாதங்கள் சென்றன. நர்மதை தன் கணவனிடம்போய் விட்டவிஷயத்தை யறிந்து ஜெமீந்தார் கடுங்கோபங்கொண்டு மனைவிக்குக் கடிதம்போடுவதையும் நிறுத்தினார். ஆனால் ஜெமீந்தாரிணி அதை லக்ஷ்யம் செய்யவில்லை. தான் வாழ்ந்து மகிழ்ந்து களித்து இன்புற்றாயிற்று. தன் வயிற்றில் பெண் பிறந்ததன் பெருமையை அவள் புக்ககம்போய் தன் கணவனுடன் ஐக்யமாகிய பிறகுதான் பூர்ணமாக அடைந்தாள். அந்த சந்தோஷத்தில் தன்னுடைய இதய நோயையும் ஒருவாறு மறந்தாள்.

வெகு சீக்கிரத்திலேயே நாகவேணியின் கடிதத்தினால், நர்மதை கர்ப்பவதியாகியிருப்பதை யறிந்த ஜெமீந்தாரிணியின் சந்தோஷம் உச்சத்தை எட்டியது. தான் மனைவி என்ற பதவியிலிருந்து தாயார் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டபொழுது அடைந்த இன்பத்தை விடப் பாட்டி என்கிற பட்டம் தனக்கு வெகு விரைவிலேயே கடவுளால் கொடுக்கப்படும் என்பதை யறிந்து பின்னும் பதினாயிரம் மடங்கு அதிகமாக உள்ளம் பூரித்தது. இதயத்தில் அமிருதம் தேங்கியதுபோல் பேரானந்த உணர்ச்சி பொங்கித் ததும்பியது.

# 35

பதினுயிரம் மடங்கு அதிகமாக உள்ளம் பூரித்தது. இதயத்தில் அமிருதம் தேங்கியதுபோல் பேரானந்த உணர்ச்சிபொங்கித் ததும்பியது. திருவேங்கடத்திற்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அதிக சந்தோஷத்தினுல் இதயமே நின்றுவிடும்போலாய்விட்டது. "ராஜம்! ராஜம்! இங்கு வாயேன். இந்த ஆச்சரியத்தைக் கேளேன்" என்று பெரிதாகக் கத்தினுன்.

உடனே ராஜமும், கூடவே வால்போல் லக்ஷ்மியும் ஓடிவந்து, "என்ன ! என்ன !" என்று வியப்புடன் கேட்டார்கள்.

திரு :—மூடாத்மாக்களே ! உங்களுக்குப் பொருமையும் வயிற்றெரிச்சலும், துரெண்ணமும் துராக்ருதமுந்தான் தெரியும். உங்களுடைய போதனையின் விபரீதத்தினுலும், நீ செய்த ராக்ஷஸ ஸாகஸத்தினுலும் நான் அந்த சமயம் புத்தி கெட்டுப்போய் அந்த உத்தமியாகிய விலாஸினியின் இதயத்தைப் புண்படுத்தி வாழ்வைப் பாழாக்கி வதை செய்துவிட்டேன். அந்த வதையின் பலன்தான் நம்மை இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டது. என்னறிவு மங்கியதைச் செருப்பாலடிக்கவேண்டும். மதுசூதனனையும் பாழாக்கி அந்த நிரபராதியையும் குட்டிச்சுவராடித்து இருவரையும் இரு சன்னியாசிகளாகச் செய்வதற்குத்தான் நீ அத்தகைய துராக்ருதம் செய்தாய்.

"இன்னு செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்துவிடல்."

என்ற திருவள்ளுவரின் வாக்கை அந்த மகா உத்தமி, பரிசுத்தவதி எப்படி மெய்ப்பித்துக் காட்டியிருக்கிருள் பாரு. இந்த கடிதத்தைப் படித்தபிறகாவது உங்களுக்கு புத்தி வருமா பாருங்கள். வெட்கமாவது வருகிறதா ! பாருங்கள்" என்று கூறியபடியே கடிதத்தைக் கொடுத்தான். ஆடு திருடிய கள்ளனைப்போல் முகத்தில் அசடு வழிய வாயைத்திறக்காது தாயும்மகளும் கடிதத்தைப் பிரித்தார்கள்.

அதற்குள் 100 ரூபாய் நோட்டு ஒன்று இருப்பதைக் கண்டு மாமிசத்தைக் கண்ட நாயைப்போல் முகம் மலர்ந்தது. இவர்கள் 100 ரூபாய் நோட்டைக் கண்டு எத்தனை காலமாயிற்று. இருவருடைய முகமும் ஒருக்ஷணம் வியப்புக்கடலில் மூழ்கியது. அடுத்த விநாடி தலைகீழே இறங்கியது. கடிதத்தை லக்ஷ்மி படிக்கத் தொடங்கினுள்.

"பெரியார் திருவடிகளில் அனந்தங்கோடி வந்தனங்கள்.

இந்த மகா பாவியைப்பற்றித் தங்களுக்கு ஞாபகங் கூட இருக்காது; எனினும் இவ்வேழை ஒருபோதும்மறக்க வில்லை. உங்கள் குடும்பம் படும் அவஸ்தையை முற்றும் அறிவேன். என்னல் பெருந்துயரை நிவர்த்தி செய்ய முடியவில்லையெனினும் தங்களுடையவறுமைக்கு, உங்கள் மகனுடைய விலையிலாமாணிக்கம் போன்ற கவிகளின்—சந்தோஷ மலர்களின்—மூலமாக உதவிசெய்ய என்னிதயம் தவித்தது. அவருடைய பொன்னே போன்ற கவிகளைப் பிரசுரம் செய்தேன். அதை எல்லா பள்ளிக்கூடங்களிலும் வைக்கும்படிப் பல பிரமுகர்களைப் பார்த்து, வேண்டினேன். கமிட்டியில்பாஸாயிற்று. இன்று உங்கள் திருக்குமாரர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஜன்மஸ்தானத்தில் தவம் செய்துகொண்டிருப்பினும், அவருடைய கவிமலர்கள் ஒவவொரு பள்ளிக்கூடத்திலும் மணத்துடன் உலாவுகின்றன. பிள்ளைகளின் பாராயணமாய் விளங்குகின்றன. அதில் கிடைத்த இந்த முதல் தொகை 100 ரூபாயை இதோடு அனுப்பியிருக்கிறேன். உங்கள் குமாரர் சிறைச்சாலையிலிருந்தும் குடும்பத்தைப் போஷிக்கும் கடமையில் சற்றும் வழுவவில்லை. இனிமேல் அவ்வப் போது கிடைக்கும் பணத்தை அனுப்பி வருகிறேன்.

இன்னெரு முக்கியமான விஷயம். உங்களுடைய மருமகளும் குழந்தையும் காணவில்லை என்று நீங்கள் தேடுவதையும், சிலர் 'அந்தம்மாள் ஓடிவிட்டாள்' என்கிற இழிவு பெயரைச் சூட்டித் திட்டுவதையும் கேட்டு மிக்க விசனப்படுகிறேன். இதெல்லாம் வீண் பொய். தெய்வத்திற்கு அடுக்காத அக்கிரமம். அந்தம்மாள் தற்காலத்து யுவதிகளைப்போல் புத்திசாலித்தனமாயில்லை என்பது வாஸ்தவம்; அவர்கள் வீட்டில் சண்டைபோட்டுக் கொண்டு குழந்தையுடன் ஓடிவந்ததும் வாஸ்தவம்தான். ஆனல், அவர்களுடைய புருஷனின் கண்ணியமறியாது பிச்சை எடுத்துப் பிழைக்கவந்தாராம். நாங்கள் எங்கள் பள்ளிக்கூடத்துக் குழந்தைகளை காக்ஷிகள் பார்க்க அயலூருக்கு அழைத்துச் சென்றபோது குழந்தையுடன் அந்

தம்மாளைக் கண்டேன். ஆனால் அவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. கையில் இருந்த குழந்தையின் தோற்றம் அசல் உங்கள் மகனையே பிரதிபிம்பித்து ஜ்வலித்ததால் அதைக் கண்டதும் அக் குழந்தையை விசாரிக்க என் மனம் தூண்டியது.

பிறகு விசாரித்ததில் விஷயம் தெரிந்தது. என்னிதயம் துடித்த துடிப்பை அந்த ஆண்டவனே அறிவான். குழந்தையைக்கூட ஒருகால் நான் பார்க்கக்கூடாதோ! அதற்கும் நான் கொடிய பாபத்தைச் செய்தவளோ! என்ற பயம் உண்டாகியது. அந்தம்மாளைப் பிச்சையெடுக்க விடுவதற்கு என் மனம் இடங்கொடுக்கவில்லை. நான் யார் என்பதே அந்தம்மாளுக்கு இப்போதும் தெரியாது. அவர்களை ஓர் தனி வீட்டில் இருக்கச் செய்து பணத்தைக் கொடுத்து உதவி வருகிறேன். அதுவும் குற்றமென்று தோன்றினால் உடனே அழைத்துச்செல்லலாம். அந்தம்மாள் அசடானாலும் மகா பரிசுத்தவதி என்பதில் ஐயமில்லை. அவர்களைப்பற்றி எவ்விதமான குற்றமும் தப்பபிப்ராயமும் நினைக்கவேண்டாம்.

விலாஸினி''

என்றதைப் படித்ததும் பொறுமைப் பிண்டமாயும், களிமண் மூளையாயுமிருந்தவர்களுக்கும் மனங்குழம்பியது. அவர்களை யறியாது ஏதோ சங்கடமும் கூறத்தெரியாத ஒருவிதமான துக்கமும் தொண்டையை அடைத்தது' தாயும் மகளும் பீபில்ஸ் பார்க்கு கூண்டிலுள்ள மிருகங்கள் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டார்கள். வாய் மட்டும் பேசவில்லை.

திருவேங்கடத்தின் வயிற்றில் செய்யும் சங்கடத்தைக் கூறத் திறமில்லை. ''மகாபாவி நீதான். அந்த உத்தமியின் சிந்திய குணத்தில் ஒரு திவலை உன்னிடமிருந்தால் நீ இப்படி ஒன்றுக்கு இரண்டு ஆத்மாக்களை வதை செய்திருப்பாயா! 'அவள் பிதாவின் மீது பழியானால் அவளுக்கென்னடீ! பாதகமில்லை. அவன் இஷ்டம்போல் செய்துவிடலாம்' என்று சொன்னேனே கேட்டாயா! கல்லடி சித்தன்போலல்லவா நீ செய்தாய்? அவளுடைய தரும சிந்தனையைப் பார்த்தாயா! மகாபாவி சண்டாளி. நீ செய்த இந்த பாதகத்தை எத்தனை தலைமுறையில் தீர்த்தாலும் தீராதே...எனக்கும் உன்னு

டைய ராக்ஷஸத்தனத்தின் வேகத்தில் புத்தி கெட்டுவிட்டதே இனி என்ன முட்டிக்கொண்டுதான் என்ன பலன்?" என்று வாயில் வந்தவாறெல்லாம் திட்டினான். கண்ணீரை உதிர்த்தான்.

முன்பொருநாள் தான் சண்டாளத்தனமாய் விலாஸினியின் வாழ்க்கைக் கோயிலை இடித்துப் பாழாக்கிய தினத்து நினைவு முற்றும் அவன் கண்முன்பு தோன்றியது. "விலாஸினி!" என்று தான் கூப்பிட்டபோது அவள் கூறிய வார்த்தைகள் அப்படியே அவன் காதில் ஒலிப்பதுபோன்ற தோற்றம் உண்டாகி, அவனை யப்படியே கலக்கிவிட்டது. "மகாபாதகத்தை நாம் விளைவித்தும் அவள் இத்தகைய பரோபகாரம் செய்திருப்பது என்ன ஆச்சரியம்! இத்தகைய தர்மிஷ்டைக்காகத்தான் உலகத்தில் இன்னும் சத்தியம், தர்மம் முதலியன நிலைநின்று மழை பெய்கிறது. அவளுடைய முகத்திலும் விழிக்க யோக்யதையற்ற எனக்கு அவள் செய்துள்ள இக் கைமாறுக்கு நான் என்னவிதமாக அவளுக்குக் கடமைப்படப்போகிறேன். மடத்தனமாய் ராஜம் செய்த பிடிவாதத்தின் விபரீதமல்லவா இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டது!" என்றெல்லாம் தனக்குள் எண்ணிக் கண்ணீரை ஆறுய்ப் பெருக்கினான்.

மனத்திற்கு ஒரு வழியிலும் சமாதானம் செய்துகொள்ள முடியவில்லை. எந்த வழியிலும் நிற்காது குழம்பித் தவித்தது. அதே ஏக்கத்தில் சித்தம் கலங்கிவிடுமோ, இதயம் நின்று விடுமோ என்றும் பயம் உண்டாகியது. "எது எப்படியிருப்பினும் நான் செய்த பாதகத்தை இனி மாற்றமுடியாதெனினும் அவளை நேரில் பார்த்து மன்னிப்பாவது கேட்டுக்கொள்ளவேண்டும்; அல்லது அவள் பிரியப்பட்டால் முன்பிருந்த மூட எண்ணத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு மறுபடியும் இருவருக்கும் விவாகம் செய்துவிடலாம். இம்மாதிரி செய்தால்தான் என் மனம் சாந்தியடையும்", என்றெல்லாம் எண்ணித் தவித்தான்.

மனைவி, மகளுக்குத் தெரியாமல் மறுதினமே தான் மட்டும் கிளம்பிப் போகலாமா என்று எண்ணினான். ஆனால் முன்னெச்சரிக்கையில்லாது போவது சரியில்லை என்று எண்ணி, தான் வந்து பார்க்கலாமா என்று ஒரு கடிதம் எழுதினான். அதற்குப் பதில் தன்னைப் பார்க்கவேண்டிய அவச்யமே இல்லை என்றும், அப்படி ஏதாவது தன்னால் உதவி வேண்டுமாயின் எழுதினால் போதும்; நான் இனி யாரையும் பார்க்கவேண்டிய அவசியமில்லையாதலால், மன்னிக்கவும்; கொலைகாரன் பெண்ணுக்கு உலக நாட்டம் எதற்கு? என்றும் எழுதியிருந்தாள். அதைப் படித்ததும் இன்னும் நெஞ்சம் பதறித் துடித்தது. விலாஸினியின் வைராக்கியச்சுடர் அவரைப் பிரமிக்கச் செய்தது. எண்ணுதலும் எண்ணி மனம் புண்ணாகியது. என்ன செய்வதென்று தெரியாது தத்தளித்தது.

என்னுததும் எண்ணி மனம் புண்ணுகியது. என்ன செய்வதென்று தெரியாது தத்தளித்தது. "என்ன அக்கிரமம்! இத்தனை பெரிய மனிதர்கள் அவனை விடுதலை செய்துவிட வேண்டும். என்று பிரமாதமாக எழுதிவருவது பெரிய ஆச்சரியமாகவல்லவா இருக்கிறது? அதோடு பணத்தை வாங்கிக்கொண்டு நமக்கு அனுகூலமாகச் சாக்ஷி சொல்லிய மோசக்காரன் இப்போது வெளியிட்டு விடுவதாய் பயமுறுத்துகிறுனே! இந்தத் துரோகத்திற்கு என்ன செய்வது? விவகாரம் வெளியாகிவிட்டால் கட்டாயம் நம் மானம் போய்விடுமே! என்ன செய்வது?" என்று எண்ணி ஜெமீந்தார் படுக்கையில் படுத்துத் தூக்கம் பிடிக்காமல் புரண்டார்.

தன்னை லக்ஷியம் செய்யாது தன் மனைவி. சம்மந்திகளுடன் உறவாடுவதும், பெண்ணைக்கொண்டுவிட்டதும் வேறு ஆத்திரம் அவள் மீது அடித்துக்கொள்கிறது. அவளைக் கண்ணுலும் பார்க்கக்கூடாதென்று வைராக்கியம் வேறு சாதிக்கிருர்.

"மதுசூதனனை எப்படியாவது விடுதலைசெய்யவேண்டும். புது அரசர் பட்டத்திற்கு வரும் கொண்டாட்டத்தை முன்னிட்டாவது மதுசூதனனை விடுதலைசெய்யவேண்டும்." என்று பல பிரமுகர்களும் உத்தியோகஸ்தர்களும் சர்க்காருக்கெழுதும்படி விலாஸினியும் அவள் தோழி மும்தாஜ்பீகமும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

காருண்ய கவர்ன்மெண்டு என்ன பதிலளிக்குமோ என்கிற ஏக்கத்துடன் விலாஸினி முதலியவர்கள் இருந்தார்கள். விலாஸினிக்கு உள்ள அபாரமான கவலைகளின் மத்தியில் பற்பல அரிய நூல்கள் ஆறுதலைக் கொடுத்துவந்ததோடு மதுசூதனனின் குழந்தை அவளுக்கும் பீகத்திற்கும் விலையிலாத மாணிக்கமாய்த் தோன்றியது.

குழந்தையுடன் ஓயாது விளையாடுவதும் கொஞ்சிக் குலாவி மகிழ்வதும் விலாஸினிக்கு சொர்க்கப் பதவி போன்ற இன்பமளித்தது. அக் குழந்தைக்கு வயது 5-க்குள் ஆகிறதெனினும் 'புலியின்வயிற்றில் பூனை பிறக்குமா' என்றபடி அதுவும் மகா தெளிவாயும், புத்திசாலியாயுமிருந்ததால் விலாஸினி அதற்குச் சின்ன பாட்டுக்களைச்சொல்லிக்கொடுப்பதும் எழுதக் கற்றுக்கொடுப்பதும் உயர்ந்த நீதிகளையுடைய சிறு கதைகளைச் சொல்வதுமாகப் பழக்கினுள்.

சேஷியம்மாளே இங்கு வந்தபிறகு ஒரு சிறிது மாறுதலையடைந்து ஒருமாதிரியாகத் திருந்தி வருகிறுள் என்ருல் குழந்தையைப்பற்றிக் கேட்கவேண்டுமா! விலாஸினியைவிட்டு அசையாது ஒட்டிக்கொண்டது. சதா அவளிடம் விளையாடி அவளுக்குள்ள துக்கத்தை எல்லாம் மறக்கச் செய்து அவளை இன்பசாகரத்தில் மிதக்க வைத்து, வெந்து புண்ணுயிருந்த அவளுடைய இதயத்தை சந்தோஷமலராக மலரச் செய்துவிட்டது.

குழந்தை :—என் மாமி! எங்கம்மா மட்டும் ஏன் உன்னுட்டும் படிக்கமாட்டேங்கரா! பாடமாட்டேங்கரா! பேசக்கூட மாட்டெங்கராளே!

விலா :—அவளுக்குப் பதில்தான் நீயே எல்லாம் செய்துவிடுகிறுயே கண்ணு! அதெப் பாத்து அவ சந்தோஷப்படுகிறுள்.

குழந் :—அப்பிடீன்னு! ஒனக்குக்கூட ஒரு பாபா இருந்துதுன்னுக்கா நீயும் எங்கம்மாமாதிரிதான் இருப்பயா! பாடவே மாட்டயா?

குழந்தையினுடைய இந்த நிஷ்களங்கமான வார்த்தையைக் கேட்டு அனுபவிக்காத தாயாரையும், அதைக் கண்டு அனுபவிக்கச் சக்தியிருந்தும் சிறையில் அடைப்பட்டுள்ள தந்தையின் கதியையும் நினைக்க அவளுக்குத் துக்கம் தேங்கியது. கண்ணீர் அவளை மீறி நாலு சொட்டு சொட்டி வழிந்தது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தையின் முகம் கருத்துச் சுருங்கியது. விலாஸினியின் முகத்தையே பார்த்துக்கொண்டு, "ஏம்மாமீ அழுரே! ஒனக்கும் என்னுட்டும் பாபா இல்லேன்னு அழுரே! நான்தானிருக்கேனே! என்னைத்தான் பாப்பாவா வெச்சுக்கோயேன். எங்கம்மா ஒன்னும் சொல்லமாட்டா! அவ நல்லவ" என்று பின்னும் குழந்தை சாமர்த்தியமாய்ப் பேசும்போது விலாஸினிக்கு தேகம் பூரித்து மெய்ம்மறந்தது. குழந்தையை அப்படியே வாரிக் கட்டியணைத்துப் பல முத்தங்களையிட்டு உச்சி முகர்ந்தாள்.

* * * *

அதேபோல் ஜெமீந்தாரிணியம்மாள் தன் பேரப் பிள்ளையை வாரி யணைத்துப் பல முத்தங்களையிட்டு உள்ளம் பூரித்து உலகையே மறந்தாள். நாகவேணி நர்மதையைப்ரஸவத்திற்குக்கூட அனுப்பாது தானே சகலமும் செய்து மாமியாரைப்போல் சீராட்டிப் பாராட்டி அகமகிழ்ந்தாள். ஜெமீந்தாரிணியம்மாளும் இங்கேயே கூட இருந்து ஒரு மாதமாகிய பிறகு நர்மதாவைக் குழந்தையுடன் நாகவேணி அவள் புருஷன் சகிதம் மூன்று மாதலீவுக்குத் தன் கிராமத்திற்கு அழைத்துவந்தாள்.

நர்மதையின் கணவனும் ஜெமீந்தார் மரபைச் சார்ந்தவனுதலால் தன் மாமனுரின் முடுக்கில் அவனும் குறைந்தவனல்ல. ஆகையால் அவருக்கும் இவனுக்கும் கடிதப்போக்குவரத்தே இல்லை. மாமனுர் விஷயத்தில் மருமகன் அலக்ஷியமாகவே இருந்தான். நர்மதையின் மூலம் மதுசூதனன் விஷயம் எல்லாம் தெரிந்ததே அதற்குக் காரணமாயிற்று.

மதுசூதனன் இயற்றிய "சந்தோஷ மலர்" என்கிற கவிகளை கிராமத்தில் வந்திருந்தபோது முற்றிலும் படித்தான். அந்தக் கவிகளின் ஸாரத்தில் அவன் மனம் லயித்ததால் நர்மதையையும் அவள்

சகோதரியையும் பாடச்செய்து கேட்டு இன்புறுவான். இத்தகைய மகானைச் சிறையிலிட்ட பாதகத்தை எண்ணி மனந்தவித்தான். நர்மதையின் மனத்தைப்போலவே இவன் மனமும் அந்த அம்சத்திலும் ஒன்ருக விருந்தது.

நர்மதையும் அவள் தாயாரும் மாசிலாமணியிடம் வேண்டிக் கொண்டதோடு அவன் மனமும் இளகியதாலும், அவன் பெரிய உத்யோகஸ்தனும் பட்டதாரியுமாகையால் தகுந்த பெரிய மனிதர் களையெல்லாம் பிடித்துச் சிபார்சுசெய்து ராஜாவின் பட்டாபிஷேக தினத்திற்கு எப்படியாவது மதுசூதனனை விடுதலை செய்யவேண்டும் என்று பெரு முயற்சிசெய்தான். கவர்னரைப் பேட்டி கண்டான்.

மதுசூதனனுக்கு இந்த தகவல் ஒன்றுமே தெரியாது அவன் தனது தூய வாழ்க்கையை வெகு உத்ஸாகத்துடனும் அபரிமித மான ஆனந்தத்துடனும் நடத்திவந்தான். சிறைச்சாலேயே வெகு மேன்மையான பாடசாலையாய், கல்விச்சாலையாய், அறச்சாலையாய் மாறிவிட்ட பெருமை ஜெயிலர் முதல் வார்டர் வரையில் நன்ருகத் தெரியுமாதலால் அவர்களால்நன்மதிப்பும் மரியாதையும் கிடைத்தது.

ராஜாவின் பட்டாபிஷேக விழாவுக்கு மதுசூதனனை விடுதலை செய்து விடுவதென்று கவர்ன்மெண்டும் தீர்மானித்து உத்திர வளித்தது. இந்த செய்தி மதுசூதனனுக்குச் சிறிதும் தெரியாது. ஆனல் அவன் விடுதலையில் பேராவல்கொண்டுள்ள நர்மதாவுக்கு அவள் கணவன் மூலம் விஷயம் எட்டி மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தாள். அதேபோல் விலாஸினிக்கும் செய்தி தெரிந்து பேரா னந்தமடைந்தாள்.

ஆனல், ஜெமீந்தாருக்கு இச்செய்தி தெரிந்ததோடு இதற்கு முக்யமாய் நின்று பாடுபட்டவன் தன் மருமகன் என்று தெரிந்த தும் அபாரமான கோபமும் எரிச்சலுங்கொண்டு தத்திக் குதித்துத் தாண்டவமாடினர். "பகவான் ஒருவன் இல்லையா! அவன் எல்லோ ருக்கும் படியளக்காமலா போவான்? மூர்க்க குணமும், க்ஷாத்திர முங்கொண்டு ஜெமீந்தார் ஓர்சாதுவைச் சிறையிலடைத்தும், கடவுள் காருண்ய கவர்ன்மெண்டின் மனத்தில் அன்பும், பச்சாத்தாபமும் உண்டாக்கியதால் அவனை விடுதலைசெய்யப் போகிருர்களாம். இப் போது ஜெமீந்தார் முகத்தை எங்கு வைத்துக்கொள்ளப்போகிருர்?" என்று பெரிய மனிதர்களே ஏசிப்பேசுகையில் சாதாரண பொது மக்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

விலாஸினி இச்செய்தியை மதுசூதனனின் பெற்ருேருக்கும் எட்டவைத்தாள். அவனுடைய குழந்தையை "பாப்பா! ஒங்கப்பா வாப்போகிருராம் கண்ணு! நீ ஓடிப்போய் அழைச்சிண்டு வரயா!" என்று கேட்டாள்.

குழந்தையின் சந்தோஷத்தைக் கூற முடியுமா? "நிஜமாகவா மாமீ எங்கப்பா வரப்போறு? என்னிக்கி வரப்போரா மாமீ! அவ ரும் வந்த ஒடனே இங்கேதானே வருவா! மாமீ! அவருக்கு நான் இந்த புத்தகத்துலே இருக்கற பாட்டை எல்லாம் பாடிக் காட்டப் போறேன் மாமீ! நீயும்கூட பாடுவயா?" என்றது.

விலாஸினிக்குப் பேசமாட்டாது நெஞ்சையடைத்து "கண்ணு! நீ எல்லாப் பாட்டையும் நன்னு பாடிக் காட்டி ஒங்கப்பாவே ஆனந் தப்படுத்து கண்ணு! ஒனக்குத் தெரிஞ்ச கதைகள், பாடங்கள் எல்லாத்தையும் அப்பாக்கு படிச்சுக்காட்டு. அப்பத்தான் அப்பாக்கு சந்தோஷமாயிருக்கும். கண்ணு! இந்த "சந்தோஷ மலர்" புத்தகம் இருக்குபாரு அதை நீயே கொண்டுபோயி ஒங்கப்பாகிட்டெ குடு. அப்பாவை நமஸ்காரம்பண்ணு. சமத்தாயிரு. தெரியுமா! மொதல்லே என்ன பாட்டு பாடணும் தெரியுமா!

ராகம் : சுரட்டி - தாளம் : ஆதி.

" காத்திடுவாய் கண்ணு! கடைக்கண் நோக்கி
பார்த்திடுவாய் கண்ணு! (கா)
மாற்றறியாத மணிச்சுடரே! துன்பச்
சேற்றிலுழன்று என் ஜென்மம் வீணுகாமல் (கா)

என்ற பாட்டைப் பாடி அப்பாவைக் கட்டிக்கொள்ளு. என்ன?.... ஒனக்கு நிறைய பழங்கள், மாலைகள் எல்லாம் வாங்கித்தரேன். அதையும் அப்பாவுக்குக் குடு. என்ன! செய்றயா?" என்ருள். குழந் தையின் குதூகலம் மேல்பஞ்சம ஸ்தாயியை எட்டியது. கைக்குப் பிடிபடாமல் குதித்தாள். ஆடினுள்; பாடினுள்: கும்மாளமடித்தாள்.

தன் தாயாரிடம்போய் "அம்மாம்மா! நம்ப அப்பா வரப் போருளாம். அந்த மாமி சொன்னு. நான் அப்பாவை அழைச்சுண்டு வரப்போகபோரேன். நீயும் சமத்தாய் என்னேடே வரயா?" என் றது. அதைக்கேட்ட ரெட்டைமண்டை சேஷியம்மாளுக்கும் நகைப்பு வந்தது என்ருல் வேறு என்ன வேண்டும்?

விலாஸினிக்கு ஒரு கடிதம் கிடைத்தது. மகாராஜாவின் பட் டாபிஷேகத்தன்று காலையில் மதுசூதனனை விடுதலை செய்வதாய் அதில் கண்டிருந்தது. அதைப் படித்ததும் விலாஸினியின் விழிகள் ஆனந்தபாஷ்பத்தை உதிர்த்தன. அதைத் தன் தகப்பனுருக்கும் தோழிக்கும் காட்டினுள்.

அதேபோல் ஜெமீந்தாரிணியின் கிராமத்திலும் சந்தோஷமும் ஆனந்தமும் பொங்கின. தன் பிதா செய்த சதிக்குப் பரிகார மாய்த் தன் கணவன் செய்த நன்மையை எண்ணி நர்மதை உள்ளம் பூரித்தாள். விடுதலை தினத்தன்றுத் தாம் எல்லோருமே சென்று அவனை வரவேற்கலாமா என்றும் நர்மதைக்குத் தோன்றியது.

ஆனல் அதற்குமட்டும் ஜெமீந்தாரிணி ஒப்புக்கொள்ளவில்லை. ஏற்கனவே வருஷக் கணக்காய் விரோதிபோலுள்ள தன் கணவனின் மனது பின்னும் முறிந்துவிடும். பகிரங்கத்தில் அவருக்கு விரோதியாவது கூடாது. உலகம் நிந்திக்கும். அவர் எத்தனை நியாய விரோதமான காரியங்களைச்செய்தாலும் நாமும் அப்படி ப்ரதியாகச் செய்வது சரியில்லை. இந்த கோபத்தில் இன்னும் யாரை என்ன செய்து விடுவாரோ! அல்லது தற்கொலைதான் புரிந்துகொள்வாரோ தெரியாது. ஆகையால் நாம் அவசரப்படக்கூடாதென்று கூறினள். தாயாரின் வார்த்தை மிகவும் உசிதமாகத் தோன்றியதால் நர்மதை அதற்கிசைந்தாள்.

சிறைச்சாலையில் மதுசூதனன் ஆனந்தமாகப் பஜனைப் பாட்டுக்களைப்பாடி அதற்கு அர்த்தமும் சொல்லிக்கொண்டிருக்கையில் ஜெயிலர் பிரஸன்ன முகத்துடன் தோன்றி "மிஸ்டர் மதுசூதனன்! இதோ இந்த உத்திரவைப் பாருங்கள். நாளைக்குப் புதிய ராஜா பட்டத்திற்கு வரும் வைபவத்தை முன்னிட்டு உங்களை விடுதலை செய்யும்படி கவர்ன்மெண்டு ஆர்டர் வந்திருக்கிறது. நாளை உதயத்திற்கு நீங்கள் சந்தோஷமாய் வெளியே போகலாம்" என்ருர்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் மதுசூதனனுக்கு ஆச்சரியமாயிருந்தது. "என்னுடைய தண்டனை காலம் இன்னும் முடிய வெகு நாட்களிருக்கின்றனவே! இதற்குள் எனக்கு விடுதலை எப்படி கிடைக்கும்?" என்று கேட்டான்.

ஜெயிலர்:—சாம்ராஜ்யபதியின் உத்திரவு கிடைத்தால் விடுதலைக்குத் தடங்கல் ஏது? நீர் சந்தோஷமாய் குசாலாய் வெளியே போகலாம்'—என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். மதுசூதனனிடம் அதிகமான மதிப்பும், அன்பும் இருந்தாலுங்கூட உத்தியோக தோரணையின் படாடோபத்திற்காகப் பேசாமலிருப்பது தானே முறைமை. கைதியிடம் குசலப் பிரச்னம் செய்தால் கௌரவக்குறைவல்லவா!

மதுசூதனனுக்கு விடுதலையைப்பற்றி அபரிமிதமான சந்தோஷம் உண்டாகவே இல்லை. கூடவிருந்த கைதிகளுக்கெல்லாம் மிக்க விசனமும் ஏக்கமும் உண்டாயின. "சாமியாரய்யா! எங்களுக்கு இனிமே யாரு புத்தி சொல்லப்போருங்க? நீங்க பூட்டாக்கா இந்த ஜெயிலு முன்னேபோலே ஜெயிலாவே கெடக்குங்களே, நாங்கல்லாம் இன்ஞ செய்வோம் சாமியாரய்யா! மூடிக்கிட்டு கெடந்த கண்ணே தொறக்கப் பண்ணீங்களே! எங்களுக்கு இனுமே எப்படி நல்லபோது போகுங்க?" என்று இவனிடம் ஈடுபட்டிருந்தவர்களெல்லாம் கத்தினர்கள்.

மதுசூதனின் மனம் உருகியது. தோழர்களே! நான் விடுதலையாவதில் எனக்குச் சிறிதும் சந்தோஷமே இல்லை. இன்னும் பத்து

வருஷம் எனக்குத் தண்டனை கிடைத்திருக்குமாயின் பரம சந்தோஷத்துடன் உங்களிடையே ஆனந்தமாகக் காலத்தைக் கடத்தியிருப்பேன். எல்லாம் அந்த கருணாமூர்த்தியின் அருள். நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். நான் இருக்கும்போது எவ்விதம் நடந்துகொண்டீர்களோ அதேபோல் நீங்கள் தினம் தவறாது பகவானை தியானம் செய்து நல்ல மார்க்கத்தில் பொழுதைச் செலவழித்து வாருங்கள். பகவானை நம்பினால் ஒரு குறைவும் வராது. அவனை நம்பிய பக்தர்களை முதலில் சற்று சோதிப்பானே யன்றிக் கைவிடமாட்டான்.

ராகம் : மோகனம் - தாளம் - ஆதி.

மன்னாதி மன்னர் போற்றிடும் மாதவன் பதம்
என்னாளும் நம்பி ஏற்றிடு. (ம)

அன்னையைப்போலே அணைத்திடுவான் மற்றும்
உன்னத நேசன்போல் உளங்குழைவான்
தன்னிக ரில்லாத்தந்தைபோல் காப்பான்
பன்னரும் பிரேமையில் பத்தினிபோல்வான் (ம)

சத்குருவும் அவன் சந்ததியும் அவன்
அத்புதமும் அவன் ஆனந்தமும் அவன்
தத்வ நிலையுமவன் சதுர்மறை யவனே!
சத்வப்பொருளும் மற்றும் சகலமும் அவனே. (ம)

என்ன! தெரிந்ததா! தாயாய், தந்தையாய் தரணியில் மற்ற சகலமுமாய்க் காத்திடும் ரக்ஷகன் அவன் ஒருவன்தான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆதிமூர்த்தியாய் விளங்கும் அப்பனின் திருவடிகளை நம்புங்கள். இனிமேல் கனவிலும் பிறருக்குத் தீங்கிழைக்கவோ, திருடவோ, கொலை செய்யவோ, மோசம் செய்யவோ நினைக்காதீர்கள். அந்த நினைப்பே உங்களை எரித்துச் சாம்பராக்கிவிடும். இந்த சிறைவாஸந்தானே என்று நீங்கள் அலக்ஷியமாய் நினைக்கிறீர்கள். இங்கு இந்த ஜென்மத்தில் பல பேர்களும் பார்த்து நகைத்து இழிவுபடுத்தி அவமானமடைந்து சிறைச்சாலை புகுந்த கள்ளன் என்ற பட்டப்பெயரை வாங்குவதோடு நிற்காது. இந்த நீதிபதியின் தீர்ப்புக்குமேல் அங்கே இருக்கும்—உலக வழக்கைத் தீர்த்து வைக்கும்—நீதிபதியின் கடின தண்டனைக்குக் கட்டாயம் ஆளாகி பதில் சொல்லியே தீரவேண்டும். அதற்குத் தப்ப உங்க பாட்டன் வந்தாலும் முடியாது. ஆகையால், பகவான் ஒருவன் இருக்கிறான். அவனை ஏய்த்துவிட முடியாது. நாம் எந்த காரியத்தைச் செய்தாலும் அது அவனறியாது செய்யமுடியாது. சூரிய வெளிச்

சத்தை எப்படி மனிதனுல் மறைக்கமுடியாதோ அதேபோல் நம்முடைய எந்த காரியத்தையும் மறைக்கவே முடியாது.

பகவானுக்குப் பொதுவாக எல்லா காரியத்தையும் சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் நீதிக்கும் வழுவாது செய்யவேண்டும். அம்மாதிரிசெய்யும் காரியந்தான் இகத்திலும் அழியாப் பெருமையையும் சந்தோஷத்தையும் புகழையுங்கொடுக்கும்; பரத்திலும் பலனடையச் செய்யும். இதை மறக்காதீர்கள்.

கமாஸ் ராகம் : ஆதி தாளம் :

நாராயணனை நாடு !
அவன் நாமபஜனையே பாடு !—என்றும்
ஆராவமுதன் அன்பர்க்கன்பன்
பேரானந்தமும் பேறுமளித்திடும் (நா)
களவுசெய்ய எண்ணுதே ! பிறர்க்
குளவறிந்து சதி பண்ணுதே !
விளக்கில் வீழ்ந்திறக்கும் விட்டில் புழுகைப்போல்
தெளிவிழந்து தீமை செய்துழலாதே. (நா)

தோழர்களே ! நாராயணன் நாம பஜனையே உங்கள் பிறவிப் பிணியை நீக்கிப் பேரின்பப் பதவியை அளிக்கும். இது சத்தியம். முக்காலும் சத்தியம். அவனடி மறவாதீர்கள். அல்லும் பகலும் அனவரதமும் துதி செய்யுங்கள். பாவத்தை வெல்லுங்கள். துர் எண்ணத்தைக் கொல்லுங்கள். அவன் பாதமே தஞ்சமென்று ஏகமனத்துடன் நில்லுங்கள். இதுதான் உங்களுக்கு நான் செய்யும் கடைசீ உபதேசம். நேயர்களே! நீங்கள் விடுதலையடைந்ததும் என்னை வந்து பாருங்கள். நன்னெறியில் ஒழுகி காலத்தைக் கடத்துவோம். சத்மார்க்கத்தைக் கடைப்பிடியுங்கள்" என்று தத்வோபதேசம் செய்து இரவு முற்றும் அவர்களுடன் பேசியே பொழுதைக் கடத்தினன். இத்தனை மாதங்களாய்ச் சிறைச்சாலையிலடைப்பட்டுக் கிடந்தபிறகு வெளி உலகத்தைப் பார்ப்பது ஒரு புதுமையாகவே தோன்றும் போல் அவன் மனம் நினைத்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. மதுசூதனன் திருப்பள்ளியெழுச்சியைப் பாடி வழக்கம்போல் மற்றவர்களையும் பாடச் செய்தான். 7 மணி சுமாருக்கு அதிகாரியும், தலைமை வார்டரும் வந்து, "மிஸ்டர் மதுசூதனன் ! நீர் குசாலாய் வெளியே போகலாம்" என்றார்கள். கைதியை அம்மாதிரி அழைத்து அனுப்புவது எங்கும் கிடையாது. இவன் விஷயத்தில் பிரத்தியேகமான மதிப்பு உண்டானதால் அம்மாதிரிச் செய்தார்கள்.

மதுசூதனன் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு ஆனந்த பாஷ்பம் பெருக விடை பெற்று ஜெயிலர் பின்னல் வந்தான். ஜெயிலின் வழக்கப்படி உடையை மாற்றிப் பேரெழுதிக்கொண்டு

வெளிக்கதவைத் திறந்து அனுப்பினர்கள். "ஆகா! என்ன ஆனந்தம்! என்ன வாத்ஸல்யம்! என்ன அன்பு! கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்ததும் வராததும், வீதியில் தயாராய் நின்றுகொண்டிருந்த அவன் புதல்வி தனது கமலம் போன்ற சிறு கையில் "சந்தோஷ மலர்" என்கிற கவிப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஆனந்தமே வடிவாய் எதிர்கொண்டு ஓடிவந்து "அப்பாப்பா! இதோ பாரு, "சந்தோஷமலர்" புத்தகம். இந்தாப்பா! ஒனக்குத்தான் இது. இதிலிருக்கிற பாட்டெல்லாம் எனக்குப் பாடத் தெரியும்பா! விலாஸினி மாமிதான் சொல்லிக்கொடுத்தாள். அவ ரொம்ப நல்லவப்பா! இதைக்கூட அவதான் ஒனக்குக் குடுக்கச் சொன்ன!" என்று தானே கடகடவென்று மெஷின்போல் பேசிவிட்டு உடனே "காத்திடுவாய் கண்ணா!" என்ற பாட்டையும் பாடினுள்.

மதுசூதனன் என்னதான் விரக்திமயமான சன்யாசியாயிருப்பினும் அவன் இதயம் குழைந்தது. தன் குழந்தையை அவன் நேரில் சரியாய்ப் பார்த்ததுகூடக் கிடையாது. இத்தனை புத்திசாலியாய்ப் பேசியும் பாடியும் செய்ததைக் கண்டு அவன் உள்ளத்தில் இது காறும் கண்டறியாத ஓர் இன்ப ஊற்று சலசலவென்று சுறந்தது. விலாஸினி என்ற பெயரைக் கேட்டதும் துக்கம் தொண்டையில் அடைத்துக்கொண்டது. தன் கவிகளை "சந்தோஷ மலர்" என்ற பெயருடன் வெளியிட்டிருக்கும் புத்தகத்தைக் கண்டதும் பேரானந்தம் ஒருபுறம் பொங்கியது.

இவைகள் முற்றும் விலாஸினியின் வேலைதான் என்று தெரிந்ததும் பின்னும் ஆயிரம் பங்காய் உணர்ச்சிகள் ஒன்றன்மீதொன்ருய்ப் பொங்கிப் பொங்கி வந்ததால் அவனுல், ஏதும் பேசவேமாட்டாது கண்ணீர் பெருக தேகம் சிலிர்க்க தன் குழந்தையை வாரித் தூக்கி மார்புடன் அணைத்துக் கட்டி முத்தமிட்டான். அவன் ஜென்மத்தில் குழந்தையை எடுத்ததும் முத்தமிட்டதும் இதுவே முதல்தரமாகும். இதைக்கண்ட திருவேங்கடம், குமாரஸாமி முதலிய எல்லோரும் ஆனந்தக் கண்ணீரைச் சொறிந்தார்கள். எல்லோரிடமும் சில நிமிடங்கள் ஆனந்தத்தினுல் மவுனம் குடிகொண்டது.

மதுசூதனனை இறுகத் தழுவிக்கொண்ட குழந்தை அவனைவிடவேயில்லை. அவனும் குழந்தையை விட மனமற்றுத் தம்பித்து நின்ருன். காட்டில் தபோநிதியாய் இருந்த கண்வரும் சகுந்தலையை வாத்ஸல்யத்துடன் வளர்த்தார். வால்மீகியும் குசலவர்களை ஆனந்தமாக வளர்த்தார். இதுபோல் பல முனிவர்களே குழந்தையின் விலையிலா வாத்ஸல்யத்திலீடுபட்டிருந்தார்களென்ருல்மதுசூதனன்எம்மட்டும்?

அவனையறியாத பாசம் பாசிபோல் மூண்டதை அவனுல் தடுக்கவே முடியவில்லை. "உள்ளிருக்கும்போது இருந்த வைராக்ய

மென்ன! இப்போதிருக்கும் பாசமென்ன! இதுதான் அந்த மாயாவி யின் லீலாவிநோதப்போலும்" என்று எண்ணினன். இதற்குள் குழந்தை மழலையில் "எம்பா! இனுமே நீ எங்களே விட்டுப் போக மாட்டயேப்பா! அம்மாகூட இப்ப அந்த விலாஸினிமாமி கிட்ட தானிருக்கா. அந்த மாமி அம்மாவுக்கு எழுத்தெல்லாங் கத்துக் கொடுத்தா. பாட்டெல்லாங் கத்துக்கொடுத்தா. இன்னொரு சாயபு மாமியுமிருக்காப்பா! அவரொம்ப ரொம்ப நல்லவ. சதா என்னோடே வளையாடுவா" என்று மடைதிறந்ததுபோல் சொல்லிக்கொண்டே இருப்பதைக்கேட்ட மதுசூதனனுக்கு ஒன்றுமே புரியவில்லை. திகைத்தான்.

ஒருவினடிக்குள் பல யோசனைகள் தோன்றி மனங்குழம்பி யது. ஆனந்தக் கண்ணீர் பெருக திருவேங்கடம் நிற்பதைக் கண்டு குழந்தையைக் கீழே விட்டுவிட்டு "அப்பா! க்ஷமிக்கவேண்டும்" என்று கூறியவாறு காலில் விழுந்தான். திருவேங்கடத்தின் தொண் டையில் துக்கம் அடைத்துக்கொண்டது. மகனைச் சேர்த்துக்கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருகியவாறு "என் செல்வா! மது சூதனு! நீ விடுதலையானதுபற்றி என் மனது எத்தனை பூரிக்கின் றதோ, அதைவிட நீ உன் குழந்தையை வாரியணைத்த காக்ஷியைக் கண்டு என் இதயம் அமிருதமயமாய்த் தேங்கி தேகமே பூரித்து விட்டது. இதற்குத் தானடா நான் காத்திருந்தேன். இதோ! உன் பெத்த தாயார் புத்திரவாத்ஸல்யம் ததும்ப வந்திருக்கிருள். அவளே நமஸ்கரி" என்ருர்.

ராஜம்மாளும் லக்ஷ்மியும் வந்திருந்தார்களேயன்றி அருகில் வர வில்லை....பெத்ததாயின் அன்பே ஓர் விலையிலா வைரம்போன்றதல் லவா! அன்றுதான், தான் பெற்றதுபோன்ற பேரானந்தத்தை யடைந்து இருவிழிகளும் புத்திரவாத்ஸல்ய ஜோதி பிரகாசிக்க மது சூதனனை இறுகத் தழுவிக்கொண்டு, "தீர்க்காயுஷ்மான் பவ... சர்வ மங்களானிபவந்து" என்று பரிபூர்ண ஆனந்தத்துடன் சந் தோஷ மலர்போல் இரண்டு வார்த்தைகள் அவள் வாயிலிருந்து உதிர்ந்தன. வேறு பேசவே இல்லை.

பேயாயினும் தாயல்லவா! என்ற பழமொழி பொய்யாகுமா! தாய் பயித்தியமாகவிருப்பினும் தன் உதரத்தில் உத்பவித்து, தன் இதயக் கோயிலின் தீபச்சுடராய் விளங்கும் மகனிடம் அளவற்ற வாத்ஸல்யம் ஊற்றுபோல் சுறந்து கொஞ்சும் காக்ஷியைக் கண்ணு ரக்கண்டாலன்றே தெரியும்! அவள் பயித்தியந்தான். ஆனல் அவள் பரிசுத்த இதயத்திலிருந்து எழும் அன்பு விலையற்ற மாணிக்க மன்றே! பிச்சை வாங்கியேனும் பிள்ளையைக் காப்பாற்ற அவள் இதயம் தயங்காது. 'ஏற்பது இகழ்ச்சி' என்ற வாக்கே அவள் கண்

முன்பு தெரியாது. தன் குழந்தையின் க்ஷேமமே தன் சொர்க்க போகமாக அந்த ஒரு இதயந்தான் நினைக்கும். அதன் சாயையாய் தந்தையின் இதயமும் பேசும்.

கையேந்தி வாங்கி வளர்ப்பவர்களில் லக்ஷத்தில் ஒருவர்தான் பெற்ற பாசத்துடன் இருக்கிறார்கள். மற்றபடி அநேகர் சண்டையும் பூசலும், த்வேஷமும், வழக்கும், ஸ்வீகாரரத்தும், முகாலோபம் செய்யாது க்ஷாத்திரத்தால் பிரிவதும், அப்பப்ப! கணக்கிட முடியாது. இதைக் கலியுகத்தில் ப்ரத்யக்ஷமாகக் காணலாம்.

வளர்த்த மகனும் அப்படியேதான். லக்ஷத்திற்கு ஒருத்தன் தான் பெற்ற தாய் தந்தை என்று மதித்து கடமையுடன் ஒழுகுகிறான். மற்றபடி பிள்ளைகள் மேலே சொல்லியதுபோலத்தான் வாழ்கிறார்கள். இன்னும் கேட்கப்போனால் ஸ்வீகரித்த பிள்ளைக்கும் தமக்கும் மனஸ்தாபம் வந்தால் தம் சொத்துக்களைத் தம் இஷ்டமானவர்களுக்குக் கொடுக்க அவர்களும் சில இடங்களில் நினைக்கிறார்கள்; கொடுத்தும் மோசம் செய்துவிடுகிறார்கள். அதேபோல் ஸ்வீகரித்த பிள்ளைகளில் சிலர் இந்த சொத்தைத் தம் பெற்றோருக்குக் கொடுத்துவிடவும் வீண் செலவு செய்யவும் முற்படுகிறார்கள். இவை யெல்லாம் உலகத்தில் சர்வ சாதாரணமாய் நடக்கும் பழக்க வழக்கமாய்விட்டன.

என்னதானிருந்தாலும் 'பெற்ற தாயின் அன்பிற்கிணை இந்த மூவுலகமும் ஈடாகாது' என்பது தேவதா வாக்காகும். அத்தகைய தாயும், மகனுடைய துஷ்டத்தனத்தினால் சில சமயம் கடிவதும் உண்டு. ஆனால் அது அவள் உதட்டுடன்தான் நிற்கும். பத்துமாதம் இடங்கொடுத்து வளர்த்த வயிறும், தன் ரத்தத்தைப்பாலாக்கி ஊட்டி வளர்த்த இதயமும் என்றும் அவன் க்ஷேமத்தை அந்தராத்மாவுடன் பிணைத்து கோரிக்கொண்டுதானிருக்கும். ப்ரதிபலனைக் கோராது பொழியும் மேகத்தைப் போன்றதல்லவா தாயின் அன்பு! இதை மறுக்க யாராலும் முடியாது."

என்று ஏதேதோ எண்ணமெல்லாம் திருவேங்கடத்தின் கண் முன்பு சித்திரம்போல் காக்ஷியளித்தது. மதுசூதனனின் தாயின் அன்பைக் கண்டதும் திருவேங்கடம் பூரித்தான்; புலகிதமெய்தினான். நாம் இத்தகைய தாயைவிட்டு மகனைப் பிரித்து ஸ்வீகாரம் வாங்கியது கூடப் பிசகு என்ற எண்ணமும் மின்னல்போல் பளிச்சென்று தோன்றியது. கண்ணால் நீர் வழிந்து ஓடிக்கொண்டே இருந்தது.

ராஜம் சற்று தூரத்திலேயே நின்று...செத்த வீட்டில் உபசாரம் சொல்வதுபோல், "எல்லாம் காலத்தின் கோலம்" என்று கூறி மூக்கைச் சிந்தினாள். லக்ஷ்மி அதுவும் சொல்லாது கண்ணைக் கசக்கி

சிவக்கச் செய்தாள். மதுசூதனன் ராஜத்தையும் நமஸ்கரித்தான். லக்ஷ்மியை "அழாதேம்மா!" என்றான். அதற்குமேல் பேச்சில்லை.

தூர நிற்கும் கிட்டு சற்று அழுத்தமான குரலில் "இத்தனை அமர்க்களத்திற்கும், கண்ணுருவிக்கும், அந்த கொலைகாரனின் மகள் விலாஸினிதான் காரணம். இந்த குடும்பத்திற்குச் சத்ருவாய், சனியனாய் அந்த மகா பாவி அமைந்தாள்" என்று உறுமினான். இந்த வார்த்தையைக் கேட்ட திருவேங்கடத்தின் நெஞ்சு புண்ணாகியது. மதுசூதனனின் இதயம் வெடித்துவிடும்போல் துடித்தது. ஆனால் அவன் வாய் திறக்கவே இல்லை.

திருவேங்கடம் மட்டும் கிட்டுவை ஆத்திரத்துடன் திட்டி, "இனி இம்மாதிரி உளறினால் நாக்கழுகிப்போய்விடும். இன்னும் கேட்கப்போனால் உன்னாலும், உன் மாமியாராலுந்தான் அநர்த்தம் விளைந்தது. மகா உத்தமியின் வாழ்வைப் பாழ்படுத்தியதின் பலன் இது" என்று கூறினான்.

பிறகு மதுசூதனனை நோக்கி, "மதுசூதனா! உன் டாக்டர் உன்னைமறக்காது தம் காரிலேயே உன்னை அழைத்துவரும்படி காரை அனுப்பியிருக்கிறார். வா போகலாம். முதலில் விலாஸினி இருக்கும் ஊருக்குப்போய் அவளைப் பார்த்து நான் செய்த பாதகத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவளிடம் சில விஷயங்கள் அந்தரங்கமாய்ப் பேசவேண்டும். அதைப் பேசிவிட்டு, உன் மனைவி அங்கிருக்கிறாள் அவளையும் அழைத்துக்கொண்டு போகலாம். பிறகு டாக்டரைப் பார்க்கலாம்" என்றான்.

முதலில் மதுசூதனனுக்கு விலாஸினியைத் தான் ஏன் பார்க்க வேண்டுமென்றுதான் தோன்றியது. இருப்பினும் அவன் என்ன முற்றுந் துறந்த முனிவரா! அவனும் ஓர் இளங்காளைதானே! தன் குழந்தை கூறியதெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. பிறகு அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் தோன்றியது; இசைந்தான்.

எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தான் மட்டும் மதுசூதனனும் குழந்தையுடன் சேர்ந்து விலாஸினியின் தனி ஆச்ரமத்திற்குச் சென்றான். அங்கு வழக்கமாக விருக்கும் கான்சாயபுவைக் கண்டதும் குழந்தை அவனிடம் ஓடிச்சென்று "சாயபூ! இவர்தான் எங்கப்பா!... அப்பா! உள்ளே வா!" என்று அவன் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினாள்.

ஆனால் விலாஸினியிருந்த தனிவிடுதி பூட்டப்பட்டிருந்தது. உடனே மும்தாஜ்பீகம் இருக்கும் விடுதிக்கு ஓடி அவளைக் கட்டிக் கொண்டு, 'பீகம்மாமீ! எங்கப்பாவே இதோ அழச்சிண்டு வந்துட்டேன். விலாஸினி மாமியே காணமே... அவ எங்கே? தாதா எங்கே?' என்று வெகு ஆவலுடன் கேட்டாள்.

மும்தாஜ்பீகத்தின் கண்ணில் நீர் பெருகியது. அவள் மரியாதையாக உள்ளேயே ஒதுங்கி மறைவாக நின்றபடியே, "கண்ணு! அந்த மாமியும் தாதாவும் தேசயாத்திரைக்கு நேத்து ராத்திரியே போய்விட்டார்களம்மா!" என்று கம்மிய தொண்டையில் கூறினுள்.

குழந்தையை தூக்கிவாரிப்போட்டது. "ஐயையோ! நான் அப்பவே அழச்சிண்டுவரேன்னு சொல்லிட்டுப் போனேனே! அதுக்குள்ளே என்னே ஏமாத்திட்டுப் பூட்டாளே! அந்த மாமி எப்போ வருவா! அவளெ பாக்கத்தானே எங்கப்பாவையும் தாதாவையும் அழைச்சுண்டு வந்தேன். இனிமே என்ன செய்றது? என்று அழுதுகொண்டே கேட்டாள்.

இன்னும் விவரித்துக் கூறவேண்டுமா! பாம்பின் காது பாம்பறியாதா? மதுசூதனனின் உள்ளத்தில் ஒரு சிறிது துளித்து எழுந்த ஆசைச் செடி உடனே பட்டுப்போனதோடு, விஷயமும் விளங்கிவிட்டது.... தான் மகாபாவியாகையால் தம் முகத்தைக்கூடப் பார்க்கக்கூடாதென்று எண்ணித்தான் போய்விட்டாள் என்று திருவேங்கடத்தின் மனத்திலும் சுறுக்கென்று பட்டது.

இனி என்ன செய்து என்ன பயன்? பாவம்! குழந்தையின் முகம் முன்னிருந்த மகிழ்ச்சிக்கு நேர்விரோதமான ஏமாற்றமும் விசனமும் சூழ்ந்து தலை கவிழ்ந்தது. "அப்பா! அந்த மாமி ரொம்ப நல்லவதாம்பா! ஏனோ ஊருக்குப்போயிட்டா!....பீகம்மாமி! எங்கம்மாகூட அவாளோடே போயிட்டாளா?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

பீக:—இல்லேடா கண்ணு! அவ எப்பவும் இருந்த வீட்டிலேதான் இருக்காம்மா! போய் பாரு.

திரு:—அம்மணி! அந்தம்மாள் எப்போது வருவதாகச் சொல்லிச் சென்ருர்கள்?

பீக:—அதைப்பற்றிப் பேசவே இல்லை.

திரு:—உங்களுக்குக் கடிதமெழுதுவதாகச் சொன்னுர்களா! விலாசம் உங்களுக்குக் கொடுத்தார்களா!

பீக:—எதுவுமில்லை. உங்களுக்கெல்லாம் சர்வமங்களமும் உண்டாகவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திப்பதாய் சொன்னுர்கள். வேறு ஒன்றுமே சொல்லவில்லை—என்ருள்.

இதற்குள் குழந்தை ஓடிப்போய் தன் தாயாராகிய ரெட்டை மண்டை சேஷியம்மாளை அழைத்துக்கொண்டு ஓடிவந்தது. ஆனல் அந்த ஜடம் தன் கணவனைப் பார்த்தும் பேசவில்லை. அவனும் அவள் முகத்தைப் பார்க்கவேயில்லை. அவன் மனது ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு விதமான வேதனையுடன் தவித்தது. நிற்கவும் பிடிக்கவில்லை.

'விரக்தி நிறைந்த மனத்தை இக்குழந்தையினால் சிறிது தளர விட்டதின் பலன் இது. எனக்கு இத்தகைய முக்திநெறியை உப தேசம் செய்த தாயாரை நான் எந்த காலத்திலாவது காண்பேன். என் நன்றியைக் கூறி இன்பமடைவேன். என் பிழைக்கு மன் னிப்பு பெறுவேன். கடவுளே! அதற்குத் துணை செய்தால் போதும்' என்று தனக்குள் வேண்டிக்கொண்டான்.

விலாஸினியின் வைராக்யமும், அவளைத் தான் செய்த சதி யும் திருவேங்கடத்தின் நெஞ்சை அள்ளித்தின்றன. சகிக்கமுடி யாத சித்திரவதை செய்தது. 'மகாபாவி! மகாபாவி!' என்று அவனை அவன் மனச்சாட்சியே குத்திக் காட்டுவதுபோல் தோன்றியது. பிறகு எல்லோரும் தம் ஊர் வந்து சேர்ந்தார்கள்.

ஜெமீந்தாரின் கோபம் மட்டும் தீரவே இல்லை. மதுசூதனன் விடுதலையானதும், மறுபடியும் அவன் பஜனை சபையில் பழைய படியே பிரகாசிப்பதும், இன்னும் பொறாமையையே கொடுத்தது. மாதங்கள் சில சென்று மறைந்தன. மனைவி மக்களைப் பார்க்கவே இல்லை. ஒரு தினம் "ஜெமீந்தாரிணிக்கு உடம்பு மிகவும் அதிகமாக விருக்கிறது. உடனே வந்தால் முகத்தில் விழிக்கலாம். ஆபத்தா யிருக்கிறது" என்ற தந்தி கிராமத்து ஏஜண்டிடமிருந்து கிடைத்தது.

எத்தனைதான் விரோதம் பாராட்டினாலும் மனைவியின் அந்திய காலம் என்று கேட்டவுடனே மனத்தில் ஏதோ ஒருவிதமான சங் கடம் செய்தது. போகவேண்டுமென்று ஒரு துடிப்பு. வேண்டா மென்று ஒரு வீராப்பு. மனத்துடன் மல்யுத்தம் செய்தார். தனக்கு எதிராக வேலை செய்தவர்களின் முகத்தில் விழிப்பதா என்கிற எண் ணம் தலை தூக்கியது.

"சீச்சீ! முட்டாளே! உனது சுக துக்கத்தில் உன்னுடைய நிழ லாகவிருந்த உத்தமி மறையப்போகிறாள். அவளிடமா உன் துவேஷ மும் கம்பீரமும்? மறைந்துவிட்டால் இனி எந்த ஜென்மத்தில் பார்க் கப்போகிறாய்? உன்னுடைய கெடுமதியால் நீ செய்த துராக்ருதத் தின் சுமையை அறியாது ஒரு உத்தமியின்மீது கோபங்கொண்டு வருடக்கணக்காய் தள்ளிவைத்ததுபோதும். செய்த பாதகத் துடன் இன்னும் பாவத்தைச் செய்யாதே. சாகும்போது கூட மனத்தைப் புண்படுத்தாதே. நிம்மதியான சந்தோஷத்தை அளிக்க உடனே போ! போ! போ!" என்று ஒன்று உள்ளுக்குள் கூறிப் பிடரியைப் பிடித்துத் தள்ளியது.

சற்று நேரம் தத்தளித்தார். இதற்குள் சில மணி நேரமாகி விட்டது. பின்னும் ஒரு தந்தி வந்தது. "இன்னும் அதிகமாயிருக் கிறது" என்று கண்டிருந்தது. உடனே மனது நிலையிடங்கொள் ளாது தவித்தது. பிரயாணமாகிவிட்டார்.

தன்னைக்கண்டு சம்மந்தியும், மருமகனும், நர்மதையும் என்ன சொல்வார்களோ! மனைவிதான் என்ன சொல்வாளோ! அவள் எந்த நிலைமையிலிருக்கிருளோ! என்றெல்லாம் எண்ணி எண்ணி மனந்தவித்தவாறு பிரயாணத்தைக் காரிலேயே துடர்ந்து நடத்தி வீட்டை யடைந்தார்.

அப்போதுதான் பொழுது அஸ்தமிக்கும் சமயம். செவ்வானம் மனோரம்யமாயிருந்தது. பக்ஷிஜாலங்கள் ஆனந்தமாய்ப் பாடியவாறு ஓடுவதும் கூட்டில் வந்தடைவதுமாயிருந்தன. கார் சற்று அதிக மான ஓசை செய்யாமல் வாசலில் வந்து நின்றது.

ஜெமீந்தார் வரவைக் கண்ட குமாஸ்தா மரியாதை செய்து நமஸ்கரித்தான். ஆனால் ஏதும் பேசவில்லை. ஜெமீந்தார் மட்டும் 'அம் மாளுக்கு எப்படியிருக்கிறது?' என்று கேட்டுக்கொண்டே நடந்தார். குமாஸ்தா பதில் சொல்வது காதில் விழுவதற்கு முன்பே உள்ளி ருந்து வெகு ரமணீயமான தம்பூராவின் ச்ருதி "ஜய் ஜய்" என்று வெகு சுத்தமாய் ஸாரிணி அநுஸாரிணியுடன் ஜீவன் ததும்ப ஒலித்தது. அதோடு தேவகானமோ! கந்தர்வகானமோ! என்று ஐயுறும்படியாய் மதுரகண்டத்தினின்றும்,

தன்வினை தன்னைச்சுடும் என்ற சான்ரோர் வாக்கின்
பொன்மொழி பொய்க்குமோ! புரட்சிதான் ஜெயிக்குமோ
அன்புருவே கடவுள் அதில்லையெனின்
துன்புறுதல் கடனே.

நாமாவளி

கோவர்த்தன கிரிதாரி! கோபாலகிருஷ்ணமுராரீ!
பாப சம்ஹாரி! பக்தோப்சாரி
பீதாம்பரதாரீ! காருண்ய வாரீ! (கோ)

என்ற கீதங்கள் காற்றில் கலந்து ஆனந்தமாய்க் கேட்டன.

உடனே மெல்லிய குரலால், "அஞ்சாதே நெஞ்சமே!...கர்வங் கொள்ளாதே நெஞ்சமே! பாடுங்கள்" என்று ஹீனஸ்வரத்தில் கூறிய தும், கம்பீரமான ச்ருதியுடன், "அஞ்சாதே நெஞ்சமே" என்று ஆரம்பித்தது. அதே சமயம் ஜமீந்தாரின் மனத்தில் இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு எழுச்சி உண்டாகியது. அந்த வேகத்துடன் உள்ளே சென்ருர்.

ஆஹா! என்ன ஆச்சரியம்! அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. "இது உண்மையா! உண்மையா!" என்று மனத்தில் ஏதோ ஒன்று கேட்டது..."ஆம். சந்தேகப்படாதே. உன்னுல் உருக் குலைந்த மதுசூதனன்தான். சாந்தஸ்வரூபிதான். ஆத்திரத்தைக்

காட்டி ஆபத்துக்குள்ளாக்கிய உன்னிடமே சாந்த ஸ்வரூபத்துடன் உன் மனைவியின் விருப்பப்படிப் பாடுகிறான். இனி சந்தேகம் வேண்டாம்'' என்று அதே மனத்தில் வேறொன்று கூறியதும் அப்படியே தம்பித்துவிட்டான்.

தன் கணவன் வருவதைக் கண்டதும் அவ்வுத்தமியின் உடல் பூரித்தது. "நாதா! நாதா!...இனி த்வேஷமும் பகையும் வேண்டாம். பகையெல்லாம் அஸ்தமித்துவிட்டது. குளிர்ந்த கிரணங்களுடன் மதிமன்னன் தோன்றி காக்ஷி கொடுக்கிறான். அந்த ஆனந்தத்தில் உலகமே ஒரு சந்தோஷ மலர்போல் பிரகாசிக்கின்றது. உங்கள் மனத்திலும் தயைக்கும், பச்சாத்தாபத்திற்கும், பிரேமைக்கும், சாந்தத்திற்கும் இடங்கொடுங்கள். சந்தோஷமலராய் இதயம் விகசிதமடையும் ஆனந்தத்தை நீங்களும் அனுபவியுங்கள். அதுதான் எனக்கு நித்தியகல்யாண வைபோகப் பேரானந்த சுகமாகும். அதுவே என் பிறவியின் பேரின்ப நிலையாகும். வாருங்கள், வாருங்கள் !'' என்று கையை நீட்டி அழைத்தாள்.

எந்த காரணத்தின் வேகமோ ஜமீந்தாரின் மனது கரைந்தது. ஆனந்தக் கண்ணீர் உதிர்ந்தது. அவரை யறியாமலேயே, "பக்த சிகாமணியே! சத்தியத்திற்கு அழிவில்லை; அது ஜெயம் பெற்றே தீரும் என்பதை உணர்ந்தேன். க்ஷமிக்கவேண்டும்.'' என்று கூறி கையைக் குவித்தார். அவ்வளவுதான் எல்லோருடைய இதயமும் ஆனந்த மயமாய் மாறியது. சந்தோஷமலராய் மலர்ந்து இன்ப மணங் கமழ்ந்தது. ஜெமீந்தாரிணியின் முகத்தில் சாந்தியும் தெம்பும் சந்தோஷமும் பொங்கி ஜ்வலித்தன. 'இனி பயமில்லை. பிழைத்து விடுவேன்.'' என்ற வார்த்தை அவள் வாயிலிருந்து ஒலித்ததைக் கேட்டதும் எல்லோருடைய உள்ளமும் பூரித்தது. இன்ப மயமாய் மாறியது. அதை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் பெரிய கடியாரத்து மணி டாங் டாங்கென்று அடித்தது. அந்த கிராமத்துக் கோயிலில் அந்திவேளை பூஜை மணியும் டணர், டணர் என்று வெகு கம்பீரமாயும் மனோரம்யமாயும் ஒலித்தது. வேதகோஷம் எல்லோருடைய மனத்திலும் ஆனந்தக் கிளர்ச்சியை எழுப்பி உத்ஸாகத்தில் ஆழ்த்தியது. மங்களம்.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

—திருக்குறள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

| |
|---|
| 14-வது ஆண்டி லிருந்து இதுவரை சந்தா நேயரா ? |

## 1940 டிசம்பர் 31உ வ

அதன்பிறகு கிடையாதென்ப

"சாந்தகுமாரி" ஆரம்பம் முதல்

தொடர்ச்சியாக ஆதரித்து, ப

**31—12—40 தேதிக்குள்**

### தனிப்பரிசு ரூ 2

அப்படியாயின்

18-வது ஆண்டுச் சந்தா சந்தாநம்பரைக் குறித்து, ந (சந்தா நேயர்களுக்குக் கு அல்லது நாவல்களின் பெய கொள்ளுங்கள். ரூ 2-க்குமேற் டுமாயின், அதிகமாகும் பணத் நாவல்களின் தபாற்செலவுக்காக அணு ஆ வெளிநாட்டினர் அணு எட்டும் சே அனுப்பவும்.

குறிப்பு :—14, 15, 16, 17-வதாண்டுகளில் இனும் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 18-வதாண்டுக்கும் பெறமுடியாதென்பதைக் கவனிக்கவும்.

---

## 18-வது ஆண்டுப் பரிசுகள் விவரம்

**முதல் பரிசு ரூ. 20**

**2-வது பரிசு ரூ. 15**

புது வருஷச் சந்தாவை டிசம்பர் மாதம் 26-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6 பிரைஸ் சீட்டுகளை எடுத்து அவற்றிற்கு இதிற் கண்ட பரிசுகள் நமது நாவல்களாகக் கொடுக்கப்படும்.

**3-வது பரிசு ரூ. 10**

**3 பரிசுகள் ரூ. 5 விகிதம்**

**3** சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் சந்தாநேயர்கட்கு, 18-வது ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனமாகக் கொடுப்பதுடன், உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு ஒரு அணு வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணு) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

I" Vol. XVII No. 12. Regd. No. M. 2210.




உங்கள் கூந்தலுக்கு

**பளபளப்பு அளியுங்கள்**

ஜேய் கூந்தல் தைலமும் பிரில்லியன்டைனும்

உ ப யோ கி யு ங் க ள்

மற்றுமுள்ள எங்கள் கூந்தல் தயாரிப்புகளாவன :
பரிமள கூந்தல் தேங்காயெண்ணெய், தேங்கா
யெண்ணெய் ஷாம்பூ, லைம்ஸூம் க்ளிஸரைனும்,
பிரில்லியன்டைன்... அனேகமாக எல்லா பிரபலக்
கடைகளிலும் கிடைக்கும்.

A TATA PRODUCT

எப்போதும் கிடைக்குமிடம் :—

**டாம்கோ விற்பனை இலாகா.,**

19-A, வாணியர் தெரு, சென்னை.


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.